# மானியக் கோரிக்கை எண்.36

# திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

**முகவுரை**

**“தெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச்**
**சொல்லலும் வல்ல தமைச்சு”**

**(திருக்குறள் 634)**

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் “அம்மா” அவர்களின் சீரிய கனிவான தமிழகத்தை நாட்டிலேயே முதன்மை மாநிலமாக உயர்த்துவதற்கு மிகச் சிறந்த உட்கட்டமைப்பு வசதியுடன் கூடிய மாநிலமாகவும், மனிதவள மேம்பாட்டின் அனைத்து குறியீடுகளிலும் வேகமான, நீடித்து நிலைக்கத்தக்க மற்றும் அனைவரும் பங்கேற்கக் கூடிய முதன்மை மாநிலமாக மாற்றிடக் குறிக்கோளாகக் கொண்டு இத்துறை முனைப்புடன் செயலாற்றி வருகிறது.

மாநிலத்திற்கான ஆண்டுத் திட்டங்கள் மற்றும் ஐந்தாண்டுத் திட்டங்களைத் தயாரித்தல், மாநிலத் திட்டச் செலவினங்கள், இருபது அம்சத் திட்டம் மற்றும் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகியவற்றை கண்காணித்து ஆய்வு செய்தல் திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் ஆரம்பகால பணிகளாக இருந்தன.

தற்பொழுது, வரவு செலவுத் திட்டத்தில், திட்டம் மற்றும் திட்டம் சாராத பகுதிகள் ஒன்றாக சேர்க்கப்பட்டு, மத்திய திட்டக் குழுவிற்கு பதிலாக, நித்தி ஆயோக் (NITI Aayog) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு, நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள், முதன்மையான நோக்கமாக உருவாக்கப்பட்டுள்ளது. இத்துறை நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள், குறிக்கோள்கள் மற்றும் குறியீடுகளை அடைவதற்கு, வருங்காலத்தில் உலகத் தரத்திற்கு சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் காரணிகளை அடைய மற்ற

துறைகளுடன் இணைந்து செயலாற்றுகிறது. மேலும், வளர்ச்சி சார்ந்த திட்டங்களுக்கான நீண்டகால செயல் உத்திகள் அடிப்படையில் இலக்கு நிர்ணயித்தல், இடைப்பட்ட காலங்களில் செயல்படுத்த தேவையான வளர்ச்சி சார்ந்த திட்டங்களை முன்னிலைப்படுத்தல் மற்றும் அம்முயற்சிகளில் கொள்கை ஒருங்கிணைப்பினை உறுதிப்படுத்துதல் ஆகிய மாற்றங்களை உருவாக்குவதே இத்துறையின் முதன்மைப் பணியாகும்.

முழுமையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்காக, பல்வேறு அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைந்து, மாநில அளவிலான பல்வேறு துறைகள் சார்ந்த குழுவின் உறுப்பினராக இருந்து செயல்படுகிறது.

இத்துறை நித்தி ஆயோக் (NITI Aayog) உடன் ஒருங்கிணைந்து கலந்துரையாடும் மற்றும் பிரகதிக்கான மாநில அரசின் முகமைத்

துறையாகும். பிரகதியின்கீழ் (PRAGATI - Pro-Active Governance and Timely Implementation) மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் மத்திய அமைச்சகங்கள் மற்றும் மாநில அரசுகளுடன் உயர் முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்கள் மற்றும் முன்னோடி திட்டங்களை நேரடியாக விவாதித்து அறிந்து கொள்கிறார். துறைகளிடமிருந்து பெறப்படும் திட்டங்கள் குறித்த நடப்பு நிலைகள் பிரகதி இணைய வாயிலில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. மேலும், அரசு மேற்கொள்ளும் புதிய முயற்சிகளுக்குத் தேவையான ஒருங்கிணைப்பு பணிகளையும், துறைகளிடமிருந்து பெறப்படும் பொருண்மைகள் குறித்த நடப்பு நிலையைப் பிரகதியின் கீழ் (PRAGATI) பதிவேற்றம் செய்கிறது.

மாநிலத் திட்டக் குழு, பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை மற்றும் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை வல்லுநர்களின்

சிறப்புத் திறமைகளை பயன்படுத்தியும் கொள்கைகளுக்கான ஆலோசனைகளை வழங்குகிறது. மேலும், தமிழ்நாடு புத்தாக்க முயற்சி வழியாக ஆதாரங்களின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட கொள்கைகளுக்கு திட்டச் செயலாக்கம் அளிக்கிறது.

மேலும், சிறப்பு முயற்சிகள் திட்டத்தின்கீழ் மேற்பார்வையிடப்பட்டு வரும் சென்னை மெட்ரோ இரயில் திட்டம் மற்றும் சில புதிய சிறப்பு முயற்சிகளாக (New Special Initiatives) முக்கியமான உட்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சி குறித்த திட்டங்களின் முன்னேற்றத்தை வேகப்படுத்தும் முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது.

துறையின் வலைத்தளமான www.tn.gov.in/department/23-இல் இத்துறையின் செயல்பாடுகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

## 1.0 முக்கிய நடவடிக்கைகள்

i. நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகளை 2030-ல் அடைய மாநில அரசின் முயற்சிகளுக்கு அனைத்துத் துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல் மற்றும் நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளை கண்காணித்தல்;

ii. வளர்ச்சிக் குறியீட்டை அளவிடுதல் மற்றும் பெரிய திட்டங்களை மதிப்பீடு செய்தல்;

iii. மாநில நில பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியம் வாயிலாக நிலம் மற்றும் நீர் பயன்பாடு குறித்து குறிப்பான திட்டங்களின் தயாரிப்பு மற்றும் செயல்பாடுகள், சுற்றுச்சூழல் காரணிகளான நிலம், காற்று மாசடைதல், புவி வெப்பமயமாதல் ஆகியவற்றின் தாக்கம் குறித்து ஆய்வு மேற்கொள்ளுதல்;

iv. நீண்ட கால செயல் உத்திகளை செயல்படுத்துதல் மற்றும் இடைப்பட்ட கால செயல்பாட்டுத் திட்டமிடுதலை நடைமுறைப்படுத்துதல்;

v. நித்தி ஆயோக் (NITI Aayog) அமைப்புடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்;

vi. தமிழ்நாடு புத்தாக் முயற்சித் திட்டங்களைப் பரிந்துரை செய்தல், நிர்வகித்தல் மற்றும் கண்காணிப்பதன் வாயிலாக தொலை நோக்குத் திட்டம் தமிழ்நாடு 2023-ன் இலக்குகளின் ஒன்றான தமிழகத்தை நாட்டிலேயே புதுமையாக்கத்தின் இருப்பிடமாக உருவாக்குதல்;

vii. பொருளாதார மற்றும் சமூகக் காரணிகளின் அடிப்படையில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளின் சீரான வளர்ச்சியை உறுதி செய்யும் பொருட்டு மாநில சமச்சீர்

வளர்ச்சி நிதி மூலமாக செயல்படுத்தப்படும் திட்டங்களைக் கண்காணித்தல்;

viii. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டங்களுக்கு மாற்றாக, 2015 - 2016 ஆம் ஆண்டு முதல் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துதல்;

ix. பெரிய உள் கட்டமைப்பு திட்டங்களின் முன்னேற்றம் குறித்து தலைமைச் செயலாளர் அவர்களால் சீராய்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளுதல்;

x. பல்வேறு அரசுத் துறைகளை உள்ளடக்கிய சிறப்பு மற்றும் புதுமையான திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக ஒருங்கிணைந்து செயல்படுதல்;

xi. மாவட்ட திட்டக் குழுவின் ஒரு அங்கமாக செயல்படும் மாவட்ட திட்டப் பிரிவின் மூலமாக மாவட்டத்தின் வளர்ச்சி

திட்டங்களின் தயாரிப்பினை மேற்பார்வையிடுதல்;

xii. அரசுத் துறைகளில் ஆதாரங்கள் அடிப்படையிலான கொள்கை உருவாக்கத்தை மேம்படுத்துதல்;

xiii. இருபது அம்சத்திட்டத்தின் கீழ் பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் கண்காணிப்பு மற்றும் செயலாக்கம் குறித்து விவரங்கள் சேகரித்தல் மற்றும் தொகுத்தல்;

xiv. மாநில வருவாய் மதிப்பீடுகள், பொருளாதாரக் கணக்கெடுப்பு, வேளாண் கணக்கெடுப்பு, சமூகப் பொருளாதார ஆய்வுகள், சிறப்பு ஆய்வுகள், வயது முதிர்ந்தோரின் வாழ்வாதாரம் குறித்த ஆய்வு, மாநில பொருளாதாரத்தின் மாதாந்திர அறிக்கைகள் ஆகியவை குறித்து, பொருள் இயல் மற்றும் புள்ளி

இயல் துறை மூலம் பொது மற்றும் தனியார் துறைகளிடமிருந்து புள்ளி விவரங்களை சேகரித்தல், தொகுத்தல் மற்றும் பரவச் செய்தல்;

xv. வளர்ச்சித் திட்டங்கள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், வெளிநாட்டு நிதி உதவி பெறும் திட்டங்கள் ஆகியவற்றை மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித்துறை மூலமாக மதிப்பீடு செய்தல்;

xvi. மாநிலத் திட்டக் குழு, பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை மற்றும் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை ஆகிய துறைகள் செயல்படுவதற்கான நிர்வாக வசதிகள் செய்தல்;

xvii. சிறப்பு முயற்சிகள் திட்டத்தின் கீழ் ‘மெட்ரோ இரயில் திட்டம்’ போன்ற புதிய

மற்றும் சிறப்பு திட்டங்களை செயல்படுத்துதல்; மற்றும்

xviii. புதிய சிறப்பு முயற்சிகளாக முக்கியமான உள் கட்டமைப்பு மற்றும் வளர்ச்சி குறித்த திட்டங்களின் முன்னேற்றத்தை வேகப்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ளுதல்.

## 2.0 துறையின் செயல்பாடுகள்

## 2.1 நீடித்த வளர்ச்சி இலக்குகள்

**முகவுரை**

செப்டம்பர் 2015 –ல் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை மாநாட்டில் இந்தியா உள்ளிட்ட 193 நாடுகள் இந்த உலகை 2030 –ஆம் ஆண்டிற்குள் மாற்றி அமைப்பதற்காக நீடித்த வளர்ச்சி இலக்குகளை செயல்படுத்தும் திட்டத்தை ஏற்றுக்கொண்டன. அதற்கேற்ப இத்திட்டம் 01.01.2016 முதல் நடைமுறை படுத்தப்பட்டது.

இந்த நீடித்த வளர்ச்சி இலக்குகளானது எய்வதற்கு இலட்சியம் நிறைந்த ஒரு முழுமையான திட்டமாகும். 17 இலக்குகள், 169 குறிக்கோள்கள். 300 உலகளாவிய குறிகாட்டிகளைக் கொண்ட நீடித்த வளர்ச்சி இலக்குகள் அனைத்து பொருளாதார சமூக சுற்றுச் சூழலியல் மற்றும் நிர்வாகம் தொடர்பான வளர்ச்சி சவால்களை தீர்ப்பதற்கான ஓர் திட்டமாகும்.

## நீடித்த வளர்ச்சி இலக்குகளின் 5 முக்கிய கொள்கைகள்

### மக்கள்

வறுமை மற்றும் பசியை அவற்றின் அனைத்து வடிவங்களிலும் பரிமானங்களிலும் முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் அனைத்து மனிதர்களும் கண்ணியத்திலும், சமத்துவத்திலும் ஆரோக்கியமான சூழலிலும் தங்கள் ஆற்றலை நிறைவேற்ற முடியும் என்பதை உறுதிப்படுத்துதல்.

## புவி

புவியினை சீரழிவிலிருந்து பாதுகாக்க நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி அதன் இயற்கை வளங்களை நிலையான முறையில் நிர்வகித்தல் மற்றும் காலநிலை மாற்றம் குறித்த அவசர நடவடிக்கை எடுப்பதன் மூலம் இக்கால மற்றும் எதிர்கால தலைமுறையினரின் தேவைகளை பூர்த்தி செய்தல்.

## செழுமை

அனைத்து மனிதர்களும் வளமான, நிறைவான வாழ்க்கையை அனுபவிக்க முடியும் என்பதனை உறுதி செய்தல் மற்றும் பொருளாதார, சமூக, தொழில் நுட்ப முன்னேற்றம் ஆகியவை இயற்கையுடனான நல்லிணக்கத்துடன் நடைபெறுதல்.

## அமைதி

பயம் மற்றும் வன்முறையற்ற அமைதியான, நியாயமான அனைவரையும் உள்ளடக்கிய சமூகத்தினை உருவாக்குதல். அமைதியில்லாமல் நிலைத்த வளர்ச்சியினையும், நிலைத்த வளர்ச்சியில்லாமல் அமைதியையும் எட்ட இயலாது.

## கூட்டாண்மை

உலகளாவிய ஒற்றுமையை வலுப்படுத்தும் மனப்பான்மையை அடிப்படையாகக் கொண்ட நிலையான அபிவிருத்திக்கான புத்துயிர் பெற்ற உலகளாவிய கூட்டாண்மை குறிப்பாக ஏழ்மையான மற்றும் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களின் தேவைகள், அனைத்து நாடுகள், பங்குதாரர்கள் மக்களின் பங்களிப்பின் மூலம் இந்த, வளர்ச்சிக்கான இலக்குகளை செயல்படுத்தத் தேவையான வழிமுறைகளைத் திரட்டுதல்.

எவர் ஒருவரும் விடுபடா வண்ணம் அனைவருக்கும் வளர்ச்சியை உறுதி செய்தலே நீடித்த வளர்ச்சி இலக்குகளின் முக்கிய அம்சமாகும்.

**உலக அளவில் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள்**

நீடித்த வளர்ச்சி இலக்குகள் மீதான முன்னேற்றத்தினை ஆய்வு செய்திட ஆண்டுதோறும் ஐக்கிய நாடுகளின் பொது மன்ற மாநாடு கூட்டப்படுகிறது. அனைத்து நாடுகளின் அடைவுகள் தரவுகள் வாயிலாக கண்காணிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் 2019 - ல் வெளியிட்ட அறிக்கையின்படி இந்தியா உலக அளவில் 162 நாடுகளுக்கிடையே தரவரிசைப் பட்டியலில் 115 இடத்தில் உள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட உலகளாவிய குறிகாட்டிகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு இத்தர வரிசை பட்டியல் வெளியிடப்படுகிறது. இதுதவிர ஒவ்வொரு நாடும்

தாம் மேற்கொண்ட முயற்சிகளையும் அடைந்த முன்னேற்றத்தினையும், தன்னார்வ தேசிய ஆய்வு அறிக்கைகளை ஐக்கிய நாடுகள் அவையின் உயர்நிலை அரசியல் குழுவில் சமர்ப்பிக்கிறது. ஐக்கிய நாடுகளின் இம்முயற்சி உலக நாடுகளுக்கு நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைய மேற்கொண்ட முயற்சிகளை மற்ற நாடுகளுக்கு தெரிவிக்கும் வாய்ப்பாக அமைகிறது.

## இந்தியாவும் நீடித்த வளர்ச்சி இலக்குகளும்

இந்தியாவில் இந்நீடித்த வளர்ச்சி இலக்குகளை செயல்படுத்தும் முகமையாக நித்தி ஆயோக் அமைப்பு செயல்படுகிறது. நித்தி ஆயோக் அமைப்பு இந்தியாவிற்கான தன்னார்வ தேசிய ஆய்வு அறிக்கையை தயாரிக்கிறது. நித்தி ஆயோக் அனைத்து இந்திய மாநிலங்களுடன் இணைந்து நீடித்த வளர்ச்சி இலக்குகளை நம்நாடு அடைவதற்கு பல செயல்பாடுகளை முன்னெடுத்து வருகிறது. 169

குறிக்கோள்களை அடைவதற்கு தேசிய அளவிலான 306 குறிகாட்டிகள் கண்டறியப்பட்டுள்ளன.

நித்தி ஆயோக் அமைப்பு 2018-ல் வெளியிட்ட நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்தியா அடிப்படை அறிக்கை தேர்ந்தெடுக்கப்பட்ட 13 இலக்குகளில் 39 குறிக்கோள்களுக்கான 62 குறிகாட்டிகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது. டிசம்பர் 2019-ல் வெளியிடப்பட்ட நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்திய குறியீட்டு அறிக்கை 2.0, 16 இலக்குகளின் 54 குறிக்கோள்களுக்கு உட்பட்ட 100 குறிகாட்டிகளை கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு அறிக்கைகளிலும் தமிழ்நாடு தரவரிசைப் பட்டியலில் 3-வது இடத்தில் உள்ளது. இதற்கான தரவுகள் மத்திய அமைச்சகங்களின் இணைய வாயில்களிலிருந்தும், இரண்டாண்டு / மூன்றாண்டு / ஐந்தாண்டு கால இடைவெளிகளில் நடத்தப்படுகிற மாதிரி ஆய்வுகளிலிருந்தும் பெறப்படுகின்றன.

மத்திய அரசின் புள்ளியியல் மற்றும் திட்டச் செயலாக்க அமைச்சகம் பல்வேறு குறிகாட்டிகளுக்கான தரவுகளை சேகரித்து இதற்கென நிறுவப்பட்டுள்ள ஒரு இணையதளத்தில் அட்டவணைப்படுத்தி வருகிறது.

முன்னேற்றத்தை விரைவுபடுத்தவும், தொடர்ந்து மேம்பாடு அடைவதற்கும், தொடர்ந்த கண்காணிப்பும், கூட்டுமுயற்சியும் இன்றியமையாதவை. இந்தியா நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு ஒவ்வொரு மாநிலத்தின் பங்கேற்பும் அவசியமானதாகும்.

## தமிழ்நாடும் நீடித்த வளர்ச்சி இலக்குகளும்

மக்களால் நான் மற்றும் மக்களுக்காக நான் என்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கொள்கைபடி, நீடித்த வளர்ச்சி இலக்குகளை நிறைவேற்றுவதற்கு தமிழக அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. 2019 சுதந்திரதின

உரையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழ்நாடு பல்வேறு திட்டங்களின் வாயிலாக நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைய உறுதி பூண்டுள்ளது என்று அறிவித்துள்ளார்.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆய்வு**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 28.01.2020 அன்று ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. அனைத்து துறைகளும் தத்தம் கொள்கை விளக்கக் குறிப்பில் தமக்கு தொடர்புடைய நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறித்த விளக்கமும் இடம்பெற வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டனர். மேலும் தமிழ்நாடு அகில இந்திய அளவில் நீடித்த வளர்ச்சி இலக்குகளில் முதல் இடத்தை பெறுவதோடு, உலக அளவில் தனது தரத்தை மேலும் உயர்த்தும் வண்ணம் அனைத்து துறைகளும் ஒன்றிணைந்து தமது

செயல்பாட்டினை மேம்படுத்த வேண்டும் என்று எடுத்துரைக்கப்பட்டது. இதற்கு தேவையான திட்டங்களை செயல்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் முன்னேற்றத்தினை கண்காணிப்பதற்கென்றே துறைசார்ந்த ஆய்வுக் கூட்டங்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தலைமையில் நடத்தப்படும்.

நீடித்த வளர்ச்சி இலக்குகள், உலக நாடுகள் முழுமையாக எய்துவதற்கு இந்தியாவும் அதனை முழுமையாக அடையவேண்டும். இந்தியா இந்த இலக்குகளை அடைவதற்கு தமிழகம் அனைத்து இலக்குகளையும், குறிக்கோள்களையும் அடைவதில் முன்னோடி மாநிலமாக திகழ வேண்டும்.

## நீடித்த வளர்ச்சி இலக்குகள் – செயல்பாட்டிற்கான அமைப்பு

நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு தமிழ்நாடு அரசு தகுந்த நிர்வாக அமைப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

அ. அரசு தலைமைச் செயலர் தலைமையில் மற்றும் துறைச் செயலர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட ஒரு உயர் அதிகாரக் குழு இதுவரை 3 முறை கூடி மாநிலத்தின் முன்னேற்றத்தினை ஆய்வு செய்துள்ளது. நீடித்த வளர்ச்சி இலக்குகளை செயல்படுத்துதல், கண்காணித்தல் ஆகியவை மாதந்தோறும் அரசு தலைமைச் செயலரால் நடத்தப்படும் அரசு செயலர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தில் விவாதிக்கப்படுகிறது.

ஆ. எட்டு கருப்பொருட்கள் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள பணிக்குழுக்கள் தொடர்புடைய துறைச் செயலர்களின் தலைமையின் கீழ் இதர துறைகளின் அலுவலர்களை உறுப்பினர்களாகக்

கொண்டு நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறித்த திட்டமிடுதல், செயல்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் உயர் அதிகாரக் குழுவிற்கு அறிக்கை சமர்ப்பித்தல் ஆகிய பணிகளை செய்து வருகின்றன. இப்பணிக்குழுக்கள் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பணிவரன்முறைக்கேற்ப பலமுறை சந்தித்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இ. 2019 - ஆம் ஆண்டு நடந்த துறைகளுக்கான மானியக் கோரிக்கை விவாதங்களின்போது சட்டப்பேரவையில் அறிவிக்கப் பட்டதை தொடர்ந்து துறைதோறும் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் முன்னேற்றத்தை தொடர்ந்து கண்காணிப்பதற்கும் மாநிலத் திட்டக்குழுவிற்கு அவை குறித்த தரவுகளும், உள்ளீடுகளும் அளிப்பதற்கும் ஏதுவாக துறைகளுக்கான நீடித்த வளர்ச்சி அலகுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஈ. மேலும் நீடித்த வளர்ச்சி இலக்குகளை மாவட்டங்கள் அடைவதை உறுதி செய்ய மாவட்டந்தோறும் இதற்கென தனி அலகுகள் ஏற்படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. அதற்கிணங்க மாண்புமிகு அமைச்சர்களின் தலைமையில், மாவட்ட அளவிலான ஒரு உயர்நிலை குழுவும், மாவட்ட ஆட்சியரின் தலைமையில் கீழ் ஒரு செயற்குழுவும், மாவட்டநிலை அலுவலர்களைக்கொண்ட மாவட்ட அளவிலான அலகும் அமைப்பதற்கான அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மாவட்டங்கள் இது தொடர்பான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

உ. ஊராட்சி அளவில் நீடித்த வளர்ச்சி இலக்குகளை செயல்படுத்திட இந்த ஆண்டு முதலமைச்சரின் கிராம தன்னிறைவு வளர்ச்சித் திட்டம் என்ற ஒரு புதிய திட்டம் ரூ.100.00 கோடியில் 2020-21 ஆம் ஆண்டு வரவு செலவு

திட்டத்தில் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளது. இது கிராம அளவில் நிலவும் இடைவெளிகளை நிரப்புவதற்கு பயன்படுத்தப்படும்.

**கண்காணிப்பு**

உலகளாவிய குறிகாட்டிகளும், ஐக்கிய நாடுகள் அவையின் ஆண்டு அறிக்கையும், நாடுகளின் தரவரிசை பட்டியலும், முன்னேற்றத்தினை அளவிடுதலின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன. தேசிய அளவில் நிதி ஆயோக் அமைப்பு ஆண்டுதோறும் வெளியிடும் நீடித்த வளர்ச்சி இலக்குகள் மீதான இந்திய குறியீட்டு அறிக்கைகள் வாயிலாக முன்னேற்றம் அளவிடப்படுகிறது.

எவை கண்காணிக்கப்படுகிறதோ அவையே கவனிக்கப்படுகிறது. எவை மதிப்பிடப்படுகிறதோ அவையே கவனத்தை ஈர்க்கிறது. மேலும் பங்கேற்பாளர்களிடையே போட்டியை ஏற்படுத்தி

முன்னேற்றத்தினை விரைவுபடுத்த உதவி புரிகிறது என்பது கண்காணிப்பு மற்றும் மதிப்பிடுதலின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன.

**இணையதள கண்காணிப்புப் பலகை**

நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான, இணைய தள கண்காணிப்புப் பலகை தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் வடிவமைக்கப்பட்டு பொது பயன்பாட்டிற்காக 07.11.2019 அன்று மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்களால் நிறுவப்பட்டது. இது, நீடித்த வளர்ச்சி இலக்கின் கீழ் அரசின் பல்வேறு திட்டங்களின் தரவுகளின் கண்காணிப்பிற்கும் தரவுகளை காட்சியாக காணும் வகையிலும் தரவுகளை கையாளும் முயற்சியாகும். இந்த இணைய கண்காணிப்பு பலகையின் வாயிலாக, இலக்குகள் / குறிக்கோள்கள் / குறிகாட்டிகள் ஆகியவற்றின் நிகழ் நேர முன்னேற்றத்தை காண இயலும்.

இந்த இணையதள கண்காணிப்பு பலகையில் தொடர்ந்து தரவுகளை உள்ளீடு செய்வது அனைத்து துறைகளின் குறிப்பாக துறைகள் தோறும் ஏற்படுத்தப்பட்ட அலகுகளின் பணியாகும். இந்த இணையதள கண்காணிப்பு பலகையில் துறைகள் தாங்கள் மேற்கொண்ட சிறப்பு முயற்சிகளையும் பதிவிட இடமளிக்கப்பட்டுள்ளது.

இந்த இணையதள கண்காணிப்பு பலகை தொடர்ந்து மெருகேற்றப்பட்டு அதிக தகவல்களை அளிக்கும் வண்ணம் அமைக்கப்பட்டு வருகிறது. இதன்வாயிலாக அரசாங்கத்தின் கொள்கை முடிவுகள் எடுப்போர், ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள், நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறித்த ஆர்வம் கொண்டோர் எளிய வகையில் ஆய்வு செய்யும் வண்ணம் புதுமையான காட்சிப்படுத்துதலையும், தரவுகளை தேடுவதற்கு தேவையான கலன்களையும் கொண்டுள்ளது.

மாவட்ட அளவில் முன்னேற்றத்தினை கண்காணிக்கும் வகையில் மாவட்ட அளவிலான தரவுகளையும் அளிக்கிறது. இதனைத் தொடர்ந்து வட்டார ஊராட்சி அளவிலான தரவுகளை அளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

2019 - 20ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கிணங்க, மாவட்டங்கள் வட்டாரங்கள் ஆகியவற்றின் முன்னேற்றத்தினை அளவிட ஏதுவாக இப்பணி அமையும். தற்போது, மாவட்ட, வட்டார குறிகாட்டிகள் வரையறை இறுதி செய்யப்பட்டு வருகிறது.

ஊராட்சி அளவில் நீடித்த வளர்ச்சி இலக்குகளை செயல்படுத்திடும் வகையிலான முதலமைச்சரின் கிராம தன்னிறைவு வளர்ச்சித் திட்டத்தினை செயல்படுத்திடும் முகமாக ஊராட்சி அளவிலான குறிகாட்டிகள் இனம் காணப்பட்டு வருகின்றன.

பன்னாட்டு ஜெர்மன் கூட்டமைப்புடன் (GIZ) இணைந்து நகர்ப்புறங்களுக்கான குறிகாட்டிகள் வரையறை இறுதி செய்யப்படும்.

**பகுப்பாய்வும் அறிக்கைகளும்**

பல்வேறு நிலையிலான குறிகாட்டி வரையறைகளும் அவற்றிற்கான தரவுகள் விரிவாக ஆய்வு செய்யப்பட்டு, முன்னேற்றம் அடையப்பட வேண்டிய துறைகள் இனம் காணப்பட வேண்டியது இன்றியமையாததாகும். தொடர்புடைய துறைகளே இதனை செய்துக் கொள்ள இயலும். இத்துறை நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான ஒருங்கிணைப்பு மையம் மூலம் அறிக்கைகள் தயார் செய்து தொடர்புடைய துறைகளின் முயற்சிகளுக்கு உறுதுணை புரியும்.

## நீடித்த வளர்ச்சி இலக்குகளின் முன்னேற்ற அறிக்கை

பணிக்குழுக்கள் அளித்த முன்னேற்ற அறிக்கைகளின் அடிப்படையில் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் முன்னேற்றம் குறித்த 2015 - 2019 ஆம் ஆண்டிற்கான அறிக்கை தயார் செய்யப்பட்டு விரைவில் வெளியிடப்பட உள்ளது.

## திட்டங்களை இலக்குகளுடன் ஒருங்கிணைத்தல்

நீடித்த வளர்ச்சி இலக்குகளை ஒருங்கிணைக்கும் பொருட்டு, அனைத்து சார்நிலைத் துறைகளில் உள்ள மத்திய மற்றும் மாநில அரசு சார்ந்த திட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இது திட்டங்களின் தாக்கத்தை நீடித்த வளர்ச்சி இலக்கின் கண்ணோட்டத்தின் வழியே அறிந்திட வழிவகை செய்கிறது.

**திறன் வளர்ப்பு**

நீடித்த வளர்ச்சி இலக்குகளின் அறிமுக நிலையிலேயே, 2017ஆம் ஆண்டில் அனைத்துப் பணிக் குழுக்களாலும் தத்தமது உறுப்பு அலுவலர்களுக்கு, திறன் வளர்த்தல் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தால், மாவட்ட மற்றும் வட்டார அளவிலான அலுவலர்கள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புக்குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. திறன் வளர்ப்பு ஒரு தொடர் நடவடிக்கை ஆகும். ஏனெனில் நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறித்த விழிப்புணர்வு முழுமையாக புரிந்துக் கொள்ளப்பட்டு, துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்களோடு ஒன்றிணைத்தல் அவசியம் என்பதால், மாவட்ட, வட்டார, ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வளர்ச்சிக்கான திட்டங்கள் தீட்ட இயலும்.

அனைத்து துறைகளும் தமக்கான தகவல் கல்வி தொடர்பு திட்டங்களில் நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறித்த பயிற்சித் திட்டத்தினை ஒருங்கிணைக்குமாறு வலியுறுத்தப்படுகின்றன.

## 2020ஆம் ஆண்டிற்குள் அடையப்பட வேண்டிய குறிக்கோள்கள்

நீடித்த வளர்ச்சி இலக்குகள் 2030ஆம் ஆண்டில் அடையப்பட வேண்டியவை என்றாலும், அவற்றுள் சில குறிக்கோள்கள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதால், அவற்றின் தீவிரத் தன்மை மற்றும் அவற்றின் மீது உடனடியாக கவனம் செலுத்த வேண்டியதன் தேவையை உணர்ந்து இவை 2020ஆம் ஆண்டிற்குள் அடையப்பட வேண்டியவை என ஐக்கிய நாடுகள் அவை அறிவித்துள்ளது. சுற்றுச் சூழல் சீர்கேடு, தண்ணீர் பற்றாக்குறை, பேரிடர்களால் ஏற்படும் இழப்புகளைத் தணித்தல், சாலை விபத்துகளால்

நேரிடும் இறப்புகள் மற்றும் காயங்களின் எண்ணிக்கையை குறைத்தல், தாவர விலங்கின வகைகளைத் தக்க வைப்பதற்கான நடவடிக்கைகள் ஆகியவை அதனுள் குறிப்பிடத் தக்கவையாகும். தமிழக அரசு இவற்றிற்கு முன்னுரிமை அளித்து இதற்கான பணிகளை ஏற்கனவே துவக்கியுள்ளது. பல்வேறு துறைகளும் ஒருங்கிணைந்து இக்குறிக்கோள்களை அடைவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. பேரிடர் மேலாண்மை குறித்த சென்டாய் மாநாட்டு வரையறையின் வழிகாட்டுதல்படி, மாநில அரசு ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளது. இது போன்று, சாலை விபத்துகளினால் நேரிடும் உயிரிழப்புகள் மற்றும் காயங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையை பாதியாகக் குறைத்தல் தொடர்பான நடவடிக்கைகள் மீது அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

**மாநில குறிகாட்டிகள் வரையறை**

உலக அளவிலான குறிகாட்டிகளின் (232) அடிப்படையில், நாட்டின் முன்னேற்றத்தினை அளவிடும் வகையில் தேசிய அளவிலான குறிகாட்டிகள் (306) வரையறை செய்யப்பட்டுள்ளன. இதனை அடிப்படையாகக் கொண்டு, மாநிலத்தின் முன்னுரிமைகளை உள்ளடக்கி, மாநிலத்திற்கான தனித்துவமான குறிகாட்டிகளையும் சேர்த்து மொத்தமாக 388 மாநில குறிகாட்டிகள் பணிக்குழுக்கள் மற்றும் பல்வேறு தொடர்புடைய துறைகளால் வரையறை செய்யப்பட்டுள்ளன.

தரவுகளைப் பெறுதல், பல்வேறு பணிகளுக்கான துறைகளை ஒருங்கிணைத்தல், நீடித்த வளர்ச்சி இலக்குகள் ஏற்படுத்தக்கூடிய நீண்ட கால விளைவுகளைக் குறித்த புரிதல் மற்றும் திட்டங்களின் விளைவுகளின் அடிப்படையில் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகிய

நீடித்த வளர்ச்சி இலக்குகளை செயல்படுத்துவதில் உள்ள சில முக்கிய சவால்களாகும்.

தமிழகம், ஏற்கனவே பல்வேறு துறைகளில் முன்னணியில் உள்ள சூழ்நிலையில், நீடித்த வளர்ச்சி இலக்கின் குறிகாட்டிகளின் வாயிலாக அவற்றின் செயல்பாடுகளை அளவிடுதல், வெற்றியடைந்த திட்டங்களை பகிர்தல் மற்றும் நீடித்த வளர்ச்சி இலக்கினை தமிழகம் எய்துவதை உறுதி செய்திட தேவையான ஒருங்கிணைப்பினை கொண்டு வருதல் ஆகிய முயற்சிகளை இத்துறை மேற்கொள்கிறது.

## 2.2 ஆதாரங்கள் அடிப்படையில் கொள்கை வகுப்பது

08.08.2014 அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், பேரவை விதி எண்.110 - இன் கீழ், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களின் அறிவிப்பின்படி, திட்டம், வளர்ச்சி

மற்றும் சிறப்பு முயற்சிகள் (பு.இ.2(ம)ம) துறையின் 02.09.2014 - ஆம் நாளிட்ட அரசாணை நிலை எண்.81 - ல் ஆணை வெளியிடப்பட்டு ஆதாரங்கள் அடிப்படையில் வறுமை ஒழிப்புத் திட்டங்களில் அதிகப் பயனை அடையும் வகையில் கொள்கைகளை வகுப்பதற்காக அரசானது, தெற்கு ஆசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல்–வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்புடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. அமெரிக்காவிலுள்ள, மசாசூசெட்ஸ் தொழில் நுட்ப நிறுவனத்தில் (Massachusets Institute of Technology, USA) செயல்படும் அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வகம் (Abdul Latif Jameel - Poverty Action Lab) (J-PAL-SA) மிகவும் குறைந்த செலவிலும், செம்மையான முறையில் வறுமையைக் குறைக்கின்ற பல்வேறு கொள்கை முயற்சிகளை உருவாக்கவும், மதிப்பீடு செய்யவும்

முனைப்பான ஆராய்ச்சியை செய்து வருகின்ற உலகம் முழுவதும் உள்ள வெவ்வேறு பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் இருக்கும் சில சிறந்த பொருளாதார மேம்பாட்டு வல்லுநர்களையும், சமூக அறிவியலாளர்களையும் கொண்ட ஓர் கட்டமைப்பாகும்.

அரசுத்துறை அலுவலர்களின் திறனை மேம்படுத்தி, நடப்பு மற்றும் புதிய திட்டங்களின் மதிப்பீட்டாய்வுகளை திறமையாகச் செய்வதற்கு அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பு (J-PAL-SA) தமிழக அரசிற்கு உதவி செய்து வருகிறது.

தலைமைச் செயலாளரின் கீழ் அமைக்கப்பட்டுள்ள வழிகாட்டும் குழுவால், 2014 - ஆம் ஆண்டிலிருந்து இதுவரை நடந்த ஐந்து கூட்டங்களில், எட்டு முன்னோடி ஆய்வுகளும், வாய்ப்பு அறியும் ஆய்வு ஒன்றும், முழு அளவிலான தாக்க விளைவுகளின் மதிப்பீட்டாய்வு ஒன்றும்

முடிக்கப்பட்டு விட்டன. ஐந்து சீரற்ற கட்டுப்பாட்டுச் சோதனை (RCT) மதிப்பீட்டுத் தாக்கம் ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. மேலும், இதுபோன்று இரண்டு ஆராய்ச்சிகள் நடைபெறவுள்ளது.

புத்தாக்க முயற்சிகள் மற்றும் முன்னேற்றத்திற்கான உத்திகளின் அடிப்படையில், ஆய்வுகளில் கண்டறிந்துள்ளபடி, அவ்வாய்வுகளின் முடிவுகளும், பரிந்துரைகளும் வழிகாட்டும் குழு மற்றும் ஆலோசனைக் குழுவினருக்கும் மற்றும் தொடர்புடைய துறைகளிடமும் கொடுக்கப்படுகின்றன.

தற்போது, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு, பள்ளிக் கல்வி, வணிகவரி மற்றும் பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் ஆகிய

துறைகளுக்கு கொள்கை ஆராய்ச்சி ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

- **முக்கிய சாதனைகள்:**

கடந்த ஐந்து ஆண்டுகளில் ஜே-பால் உடனான தமிழ்நாட்டின் முறையான கொள்கை ஆராய்ச்சிக்கூட்டு, முக்கிய கொள்கைக் கேள்விகளைத் தெரிவிக்க, மதிப்பீடுகளின் பயன்பாட்டை ஒருங்கிணைக்க பல துறைகளுக்கு முறையான கட்டமைப்பை வழங்கியுள்ளது. முடிவெடுப்பதைத் தெரிவிக்க, தரவு மற்றும் ஆதாரங்களுக்கான தீவிர கோரிக்கையுடன் அரசாங்கம் இப்போது ஒரு வலுவான கலாச்சாரத்தைக் கொண்டுள்ளது. குறிப்பாக, சுகாதார மற்றும் குடும்ப நலத்துறைகள்; சமூக நலன் மற்றும் சத்துணவு துறை; மற்றும் பள்ளிக் கல்வித் துறைகளில் பல ஆய்வுகளை

மேற்கொண்டுள்ளது மற்றும் அடிப்படை சிக்கல்களை நன்கு புரிந்துகொள்வதற்கும் மேம்பாடுகளைச் செய்வதற்கும் ஆராய்ச்சி நுண்ணறிவுகளைப் பயன்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக, முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நன்மைத் திட்ட (எம்.ஆர்.எம்.பி.எஸ்) ஆய்வு, தாய் மற்றும் குழந்தை ஆரோக்கியத்திற்கான திட்டத்தை செயல்படுத்துவதை மேம்படுத்துவதற்காக அதன் தரவு சேகரிப்பு மற்றும் மேலாண்மை முறையை வலுப்படுத்த சுகாதாரத் துறையின் பல மேம்பாடுகளுக்கு வழிவகுத்தது. பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை ஜே-பால் இணைந்து மேற்கொண்ட ஆய்வுகளில் முதியோர் நிலைக்குறித்த முதற்கட்ட அடிப்படை குழு கணக்கெடுப்பு, மதிப்பீடுகளை கணக்கீடு செய்வதன்மூலம் முதியோரில் பெரும்பான்மையானோர்

தனிமையில் வாழ்வதற்கான சவால்களை எதிர்கொள்ள மற்றும் தலையீடுகளை மதிப்பீடு செய்ய அரசாங்கத்தைத் தூண்டியுள்ளது. ஜே - பால் உடன் இணைந்த ஆராய்ச்சியாளர்கள் கடுமையான மதிப்பீட்டின் மூலம் தாக்கத்தை ஏற்படுத்தி ஒரு புதுமையான கணித விளையாட்டுத் திட்டத்தை இயக்குவதன் மூலம் சிறுவயதிலிருந்தே கணிதத் திறன்களை வலுப்படுத்த பள்ளிக்கல்வித்துறை முயன்று வருகிறது. அரசு கொள்கை வகுப்பில் மதிப்பீடுகள் மற்றும் தரவின் பயன்பாட்டை வலுப்படுத்தவும், நிறுவனமயமாக்கவும் அரசாங்கம் இரண்டு முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டது.

அ. நிரல் மதிப்பீடுகளுக்கான வழிகாட்டுதல்களை வெளியிடுவதன் மூலம், கொள்கை வகுப்பில் மதிப்பீடுகளைப்

பயன்படுத்துவதற்கான பொதுவான கட்டமைப்பை உருவாக்குதல்.

ஆ. மேம்பட்ட பகுப்பாய்வு மற்றும் பயனுள்ள முடிவெடுப்பதற்கு நிர்வாகத் தரவைப் பயன்படுத்துவதை ஆதரிக்க தரவு பகுப்பாய்வு பிரிவு ஏற்படுத்தல்.

தமிழக அரசின் மிக முன்னுரிமையான கொள்கைத் திட்டங்களைக் கண்டறிந்து, அவற்றை விரிவுபடுத்தும் முன்பு, அவற்றின் மீது கள ஆய்வு மேற்கொண்டும் விவாதக் கூட்டங்கள் நடத்துவதன் மூலமும், இந்தியாவின் பிற பகுதிகளிலோ அல்லது உலகளவிலோ பரிசோதிக்கப்பட்ட புதுமையான கொள்கைகளைக் கண்டறிந்து அவற்றினை தமிழகத்தில் ஆய்வுக்குட்படுத்திட, தமிழக அரசும் தெற்காசியாவிற்கான அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பும் (J-PAL-SA) தொடர்புடைய முக்கிய துறைகளுடன் இணைந்து செயலாற்றி வருகிறது. இதுபோன்று,

(J-PAL-SA) ஆராய்ச்சி குழுவினருடன் இணைந்து கொள்கை ஆராய்ச்சி ஆய்வுகளை அனைவரும் பெறத்தக்க வீட்டு வசதி, இடைநிலைக்கல்வி, ஊட்டச்சத்து ஆகிய தலைப்புகளில் நடத்துவதற்கு பிற துறைகள் திட்டமிட்டு வருகின்றன.

## 2.3 சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்கள்

திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின், 29.04.2003 - ஆம் நாளிட்ட அரசாணை நிலை எண்.31 - இல் சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்களை, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் ஒரு பகுதியாக இணைத்து துறையினை விரிவாக்க அரசு முடிவெடுத்தது. வெவ்வேறு துறைகளிலிருந்து உருவாகி அரசின் முன்னுரிமையைப் பெறும் புத்தாக்கத் திட்டங்களைப் பற்றி ஆய்வு செய்வது சிறப்பு முயற்சிகள் துறையின் நோக்கமாகும்.

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் 02.11.2006 - ஆம் நாளிட்ட அரசாணை

நிலை எண்.146-இல் "சிறப்பு முயற்சிகள்" என்ற பொருண்மை அலுவல் விதிகளில் முதல் அட்டவணையில் "ஒருங்கியல் பட்டியலில்" சேர்க்கப்படுவதற்கான ஆணைகள் வெளியிடப் பட்டுள்ளன. ஒரு திட்டத்தினை "சிறப்பு முயற்சி" திட்டமாகக் கருதுவதற்கு ஆராய வேண்டிய அறிவுரைகள் வழங்கப்பட்ட பின்னர் அதற்கான செயலாக்கங்களை திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை அல்லது சம்பந்தப்பட்ட துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பாட்டிற்குக் கொண்டு வருவதாகும். ஒரு குறிப்பிட்ட சிறப்பு முயற்சி முதிர்வுநிலை அடைந்து விட்டது என்று முடிவெடுக்கப்பட்டு, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் தொடர் கண்காணிப்பு இனி தேவையில்லை என்று கருதப்பட்டால், அந்த திட்டம் சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறையிடம் ஒப்படைக்கப்படும். இந்த முறையில், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின்

18.01.2007ஆம் நாளிட்ட அரசாணை நிலை எண்.10-ல், சென்னை மெட்ரோ இரயில் திட்டம், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் கீழ் "சிறப்பு முயற்சி" திட்டமாக அறிவிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

## 2.4 புதிய சிறப்பு முயற்சிகள்

அரசாணை நிலை எண்.23, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (சி.மு.) துறை, நாள் 19.03.2018ல் புதிய சிறப்பு முயற்சிகள் என்ற நோக்கத்திற்கான ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

புதிய சிறப்பு முயற்சிகள் தொடர்பாக கீழ்க்காணும் இரண்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

1) பெரிய திட்டங்களுக்கான நில எடுப்பு மற்றும் நில உரிமை மாற்றங்களில் தற்போதைய சட்ட நடைமுறைகளால் ஏற்படும் காலதாமதத்தினை கணிசமான அளவு குறைத்தல்;

இதன்படி நிலஎடுப்பு நடைமுறைகளை ஒழுங்குபடுத்துதல் குறித்த ஒருங்கிணைந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2) சென்னைக்கு அருகாமையில் உள்ள நீர் நிலைகளை தண்ணீர் வழங்குதலுக்காக மாற்றியமைத்தல்;

இதன்படி ஒரு செயல்திட்டம் உருவாக்கப்பட்டு நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறையால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 2.5 இருபது அம்சத் திட்டம் - 2006

இருபது அம்சத் திட்டமான வறுமை ஒழிப்புக்கான தொகுப்பு திட்ட நடவடிக்கையாக, 1975ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு 1982, 1986

மற்றும் 2006 ஆகிய ஆண்டுகளில் திருத்தியமைக்கப்பட்டது. தற்போது "இருபது அம்சத் திட்டம் - 2006" எனப் பெயரிடப்பட்டுள்ளது.

வறுமை ஒழிப்பு, ஏழைகள் மற்றும் கீழ்மட்டத்தில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவது ஆகியன இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். இத்திட்டம் வறுமையினை குறைத்தல், வேலை வாய்ப்பினைப் பெருக்குதல், கல்வி, வீட்டு வசதி, சுகாதாரம், வேளாண்மை, நிலச் சீர்திருத்தம், நீர்ப்பாசனம், குடிநீர், நலிந்த பிரிவினரின் பாதுகாப்பு மற்றும் அவர்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு போன்ற குறிப்பிடத்தக்க அம்சங்களைக் கொண்டதாகும்.

இருபது அம்சத் திட்டம், 2006 - ன்கீழ் வெவ்வேறு துறைகள் மற்றும் நிறுவனங்களால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து, தலைமைச் செயலாளர் அவர்களின்

தலைமையில், மாநில அளவிலான கண்காணிப்புக் குழுக் கூட்டம் அவ்வப்போது நடைபெற்று வருகிறது. துறைகளிடமிருந்து பெறப்படும் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் தொகுக்கப்பட்டு மத்திய அரசின் புள்ளிஇயல் துறைக்கு அனுப்பப்பட்டு வருகிறது. 2019 - 2020ஆம் ஆண்டிற்கான மூன்றாவது காலாண்டு அறிக்கை மத்திய அரசின் புள்ளிஇயல் துறைக்கு 31.01.2020 அன்று அனுப்பப்பட்டுள்ளது.

## 3.0 துறைத் தலைவர்கள்

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள துறைகள் / நிறுவனங்கள் பின்வருமாறு :

1. **மாநிலத் திட்டக்குழு**
2. **பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை**

3. மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை
4. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL), ஒரு கூட்டுத் துறை நிறுவனம்.

## 3.1 மாநிலத் திட்டக்குழு

மாநிலத் திட்டக்குழு தமிழ்நாட்டில், 1971 ஆம் ஆண்டு மே திங்கள் 25ஆம் நாள் ஏற்படுத்தப்பட்டது. மாநில திட்டக் குழு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் ஒரு ஆலோசனை அமைப்பபாக செயல்பட்டு மாநிலத்தின் பல்வேறு செயல்பாடுகளில் தனது பரிந்துரைகளை அரசுக்கு அளித்து வருகிறது. மாநில திட்டக் குழு துணைத் தலைவர் அவர்களின் கீழ் வளர்ச்சி சார்ந்த முக்கிய துறைகளின் நிபுணர்களை உறுப்பினர்களாக நியமித்து செயல்படும். அரசு தற்பொழுது மாநில திட்டக் குழுவின் துணைத் தலைவர் அவர்களை நியமித்துள்ளது. அரசு செயலர், திட்டம், வளர்ச்சி

மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் அரசு செயலர், நிதித்துறை ஆகியோர் இக்குழுவின் அலுவல்சார் உறுப்பினர்களாவர். மாநிலத் திட்டக்குழுவின் உறுப்பினர் செயலர் இக்குழுவின் நிருவாகப் பொறுப்பு வகிக்கிறார்.

மத்திய திட்டக் குழு, வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யும் போது திட்டம் மற்றும் திட்டம் சாரா வகைப்பாடுகளைக் கைவிட்டு மத்திய திட்டக் குழு அமைப்பினை நித்தி ஆயோக் அமைப்பாக மாற்றியுள்ளது. இந்த அணுகுமுறைக்கு ஏற்ப, மாநில திட்டக் குழுவிற்குப் பதிலாக அந்த அமைப்பை மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவாக (State Development Policy Council) மாற்றி திருத்தியமைப்பதற்கான செயல் நடைபெற்று வருகிறது.

### 3.1.1 மாநிலத் திட்டக்குழுவின் முதன்மையான பணிகள்

கொள்கை விளக்கம், கொள்கை ஒத்திசைவு, திட்டம் மற்றும் செயலாக்க அறிக்கை தயாரிப்பு, கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் சிறப்பு திட்டங்களின் செயலாக்கம் ஆகியவை மாநில திட்டக் குழுவின் முக்கிய பணிகளாகும். இவற்றின் விரிவாக்கம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

i) தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை கண்காணித்து அதன் வளர்ச்சிக்கான அறிக்கைகளை அரசுக்கு தேவைப்படும்பொழுது அனுப்புதல்;

ii) பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு, வறுமை போன்ற பேரியல் பொருளாதார வளர்ச்சிக் குறியீடுகளைக் கண்காணித்தல் மற்றும் திட்டங்களில் செய்ய வேண்டிய மாற்றங்கள் மற்றும் திட்டங்களைத் திருத்தியமைத்தல்

ஆகியன குறித்து அரசுக்கு ஆலோசனை அளித்தல்.

iii) துறைகளுக்கிடையேயான வேறுபாடுகள் மற்றும் ஒதுக்கீடுகள், ஒழுங்குமுறை ஆகியவற்றின் இலக்குகளை அடைவதற்கான கட்டாய கட்டமைப்பு உள்ளடக்கிய கொள்கை ஒத்திசைவு ஆலோசனைகளை வழங்குதல்.

iv) கொள்கைகள், திட்டங்கள் மற்றும் திட்டங்களை வகுப்பதற்கும், அவற்றை செயல்படுத்துவதை துரிதப்படுத்துவதற்கும், கொள்கை ஒத்திசைவு சிக்கல்களை முறையாக நிவர்த்தி செய்து, துறை மற்றும் துறை சார்ந்த சிக்கல்களைத் தீர்ப்பதற்கான ஒரு தளத்தை வழங்கும்.

v) தமிழ்நாடு தொலைநோக்கு 2023 மற்றும் நீடித்த வளர்ச்சி இலக்குகள்–2030ல் (2020 மற்றும் 2025) குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை அடைவதற்கும், ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு

வழிகாட்ட நீண்டகால, நடுத்தர மற்றும் குறுகிய கால இலக்குகளை வகுப்பதில் மாநில அரசுக்கு உதவுதல்.

vi) தமிழ்நாடு தொலைநோக்கு **2023** மற்றும் ஐக்கிய நாட்டு பொது சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட **2020, 2025** மற்றும் **2030**ல் அடைய வேண்டிய நீடித்த வளர்ச்சி இலக்குகள் நிதிக்குழுவின் கால அளவு ஆகியவற்றிற்கு ஏற்றாற்போல் துறைச்சார்ந்த செயல்பாட்டு திட்டங்கள் மற்றும் அறிக்கைகளை உருவாக்குதல்.

vii) அரசு சார்ந்த வல்லுநர்கள் மற்றும் தேசிய, பன்னாட்டு வல்லுநர்கள், கல்வி மற்றும் கொள்கை ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் இடையிலான கூட்டமைப்பை ஊக்குவித்தல்,

viii) தேசிய மற்றும் பன்னாட்டு வல்லுநர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் பிற முதலீட்டாளர்கள் கூட்டு சமூகத்தின் மூலம் அறிவு, புதுமை மற்றும்

தொழில் முனைவோர் ஆதரவு அமைப்பை உருவாக்க உதவுதல்.

ix) மாநிலத்திற்கு தேவையான குறியீடுகள் எ.கா. மனிதவள மேம்பாடு குறியீடு, பாலின குறியீடு, மற்றும் இதர குறியீடுகள் பன்னாட்டு மற்றும் தேசிய தரத்தில் வளர்ச்சி மற்றும் செயல்பாடுகளை அணுகுதல் மற்றும் உகந்த திட்டங்களுடன் அரசிற்கு ஆலோசனை வழங்குதல்.

x) தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், இந்திய அளவிலும் உலக அளவிலும் செயல்பட்டுவரும் பல முன்னோடியான நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு துறைகளில் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் குறித்து தொடர்ந்த ஆய்வின் வாயிலாக அத்துறைகளில் செயல்படுத்தப்படவேண்டிய நுட்பமான விளக்கங்களை அரசுக்கு வழங்குதல்.

xi) நடைமுறையில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்

அ. மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி

ஆ. மாநில புதுமை முயற்சிகள் திட்டம்

இ. மலை / வனப்பகுதிகளுக்கான சிறப்புத் திட்டம்

ஈ. தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாடு ஆராய்ச்சி வாரியத்தின் செயல்பாடுகள்

xii) இந்திய அரசியல் அமைப்பு திருத்தச்சட்டம் 73 மற்றும் 74–ன்படி விரிவாக்கப்பட்ட அத்தியாவசியமான திட்டங்கள், வழிமுறைகள் மற்றும் விளைவுகள் குறித்து கருத்துரு அனுப்புதல்.

xiii) இதேபோல், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பாதுகாப்பு மற்றும் ஒருவரும் விடுபடாமல் இருத்தல் என்ற கருத்தின் அடிப்படையில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

## 3.1.2 மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி

மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி 2012-13ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு தனித்துவமான திட்டமாகும். சமூக-பொருளாதார வளர்ச்சியை அளவிடக்கூடிய காரணிகளில் காணப்படும் ஏற்றத்தாழ்வினைக் குறைத்து, மனித மேம்பாட்டு வளர்ச்சியை உயர்த்துவதே இதன் முதன்மைக் குறிக்கோளாகும். மேலும், மாவட்ட அளவிலும், வட்டார, நகரப் பகுதிகளிலும் மனித மேம்பாட்டு வளர்ச்சி நிலையைக் கண்காணிக்கவும், அதனை உயர்த்துவதற்கும் தேவையான திறனை வளர்த்து அனைவரும் பயனடையக்கூடிய வகையில் பொருளாதார வளர்ச்சியை எட்டுவதும் இதன் குறிக்கோளாகும்.

தனிநபர் வருமானம், வேலைவாய்ப்பு, வறுமை, சுகாதாரம், கல்வி, பாலின சமத்துவம் ஆகிய காரணிகளின் அடிப்படையில் பின்தங்கிய பகுதிகள் கண்டறியப்பட்டன.

- கிராமப் பகுதிகளில் பின்தங்கியவையாக 105 வட்டாரங்கள் கண்டறியப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
- மேலும் 105 பின்தங்கிய வட்டாரப் பகுதிகளில் அடங்கியுள்ள பேரூராட்சிகளும் அவற்றுள் மக்கட்தொகை அடர்த்தி அதிகமுள்ள பகுதிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
- மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் நான்கில் ஒரு பங்கு வார்டுகளில் பெரும்பான்மையாக குடிசைவாழ் மக்கள் உள்ள பின்தங்கிய பகுதிகளுக்கு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

## திட்டம் தயாரித்தல்

பின்தங்கிய வட்டாரங்களுக்கான வளர்ச்சித் திட்டம் தயாரிப்பதற்காக விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டு மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மாவட்டங்களில் பின்தங்கிய பகுதிகளை மேம்படுத்துவதற்கான கருத்துருக்கள் மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெறப்படுகிறது. பல்வேறு மாவட்டங்களில் உள்ள பின்தங்கிய வட்டாரங்களில் நிலவும் பொதுப் பிரச்சினைகளுக்கான தீர்வு காண ஏதுவாக துறைகள் வாயிலாகவும் திட்டங்கள் கண்டறியப்படுகின்றன.

## திட்டங்களுக்கான ஒப்புதல்

மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி அமைக்கப்பட்ட அதிகாரம் பெற்ற குழுவால், கடந்த 2019 - 20–ஆம் ஆண்டு வரை ரூ.567.62 கோடி மதிப்பிலான 733 திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்த 733 திட்டங்களில், ரூ.50.00 இலட்சத்திற்கு மேல், 282 திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இதுவரை அனுமதிக்கப்பட்ட திட்டங்கள் பின்வரும் காரணிகளை மேம்படுத்துகின்றன.

| | |
|---|---|
| வருமானம் | ரூ. 89.37 கோடி மதிப்பீட்டில் 128 திட்டங்கள் |
| வறுமை | ரூ.73.90 கோடி மதிப்பீட்டில் 109 திட்டங்கள் |
| வேலைவாய்ப்பு | ரூ.57.18 கோடி மதிப்பீட்டில் 126 திட்டங்கள் |
| கல்வி | ரூ.70.61 கோடி மதிப்பீட்டில் 89 திட்டங்கள் |
| சுகாதாரம் | ரூ.226.08 கோடி மதிப்பீட்டில் 215 திட்டங்கள் |
| பாலின சமத்துவம் | ரூ.50.48 கோடி மதிப்பீட்டில் 66 திட்டங்கள் |

ஊரக மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுவத்துவதற்காக ஒருங்கிணைந்த பண்ணையம், தையல் பயிற்சி அளித்து ஆயத்த ஆடைகள் தயார் செய்தல், சிறுதானியங்கள் பதனம் செய்தல், கயிறு தயாரித்தல், நரிக்குறவர்களுக்கு மணிமாலை தயாரிக்க நிதியுதவி அளித்தல் போன்ற திட்டங்கள் வாயிலாக அம் மக்களுக்கு வருடம் முழுவதும் வருமானத்தை பெருக்குவதற்கும் அவர்களின் குழந்தைகள் கல்வி பெறுவதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் அவர்கள் கிராமத்திலிருந்து நகரத்திற்கு பிழைப்புதேடி இடம் பெயராமல் கிராமத்திலேயே அவர்களுக்கு நல்ல வருமானம் ஈட்ட வழிவகை செய்யப்பட்டுள்ளது. குடும்ப வருமானமும் கணிசமாக உயர்ந்துள்ளது.

கிராம உட்கட்டமைப்பு வசதிகளான சாலை அமைத்தல் மேலும் அவர்களின் போக்குவரத்திற்காக சிற்றுந்து மற்றும் பாரம் சுமக்கும் வண்டிகள் ஆகியவற்றிற்கு நிதியுதவி

அளிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இங்கு வசிக்கும் கிராம மக்கள், மருத்துவமனை, கல்வி, சந்தை மற்றும் நகர்புறங்களில் வேலைக்கு செல்வது சாத்தியமாகி உள்ளது.

மேல்நிலை வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெற்று பொறியியல் கல்லூரிகளிலும் மற்றும் அரசு மருத்துவக் கல்லலூரிகளிலும் சேர்க்கப்பட்டுள்ளார்கள். கஸ்தூரிபா காந்தி உண்டுஉறைவிடப் பள்ளிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை செய்து கொடுத்ததன் மூலம் கல்வி நிலையில் பின்தங்கியுள்ள வட்டாரங்களில் உள்ள சிறுமிகளின் இடைநிற்றல் தவிர்க்கப்பட்டு தற்போது அதிக சிறுமிகள் படித்து வருகிறார்கள். இதன் மூலம் அவர்கள் படிப்பதற்கு நல்ல சூழல் உருவாகியுள்ளது. அதேபோல் இந்த வசதிகள் எல்லா அரசு பழங்குடியினர் உண்டுஉறைவிட பள்ளிகளில் மற்றும் வனத்துறை

பள்ளிகளிலும் செய்து கொடுக்கப்பட்டுள்ளதால் அப்பள்ளிகளில் கணிசமான அளவில் மாணவ மாணவியரின் சேர்க்கை அதிகமாகி உள்ளது.

மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின் மூலம் கிராம மக்களின் நல வாழ்வினை மேம்படுத்தும் பொருட்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் ஆகியவற்றிற்கு அதிக அளவில் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கிராம மக்களின் சிசு இறப்பு, பேறுகால இறப்பு, இரத்த சோகை இவற்றின் விகிதம் கணிசமாக குறைக்கப்பட்டுள்ளது. மேலும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர் மருத்துமனைக்கு அருகிலேயே தங்கும்வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் கிராமப்புற மக்களுக்கு மருத்துவ வசதிகள் கிடைப்பது மேலும் எளிதாகியுள்ளது. குழந்தைகளின் உரிமைகளை பாதுகாத்தல், குழந்தைகளுக்கு சத்தான உணவு கிடைப்பதை உறுதிசெய்தல் போன்ற நடவடிக்கைகள்

வாயிலாக குழந்தைகளின் உடல்நல குறியீட்டு காரணிகள் மேம்பாடு அடைந்துள்ளன.

பெண் குழந்தைகளுக்கு கல்வி, நலவாழ்வு, இரத்த சோகையை கட்டுபடுத்துதல் மற்றும் பெண்களுக்கு வேலைவாய்ப்பு ஆகியவற்றின் மூலமாக பாலின வேற்றுமை பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது.

**மலை/வனப் பகுதிகளுக்கான சிறப்புத் திட்டம்**

மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி திட்டத்தின் கீழ் உதவிபெறும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர், மலை/வனப் பகுதிகளை மேம்படுத்துவதற்கான சிறப்பு திட்டம் ஒன்றினை (சட்டப்பேரவை விதி 110 - ன்கீழ்) 2017 - 18 ஆம் ஆண்டில் அறிவித்துள்ளார்.

இச்சிறப்பு திட்டத்தின்கீழ் மலை/வனப் பகுதிகளின் வளர்ச்சிக்காக 2019 - 2020 ஆண்டு வரை 55 திட்டங்கள் ரூ.98.03 கோடி மதிப்பீட்டில்

வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் வாயிலாக மலை/வனப் பகுதிகளில் வாழும் பழங்குடியினர் வாழ்விடங்களில் தேவையான சாலை இணைப்பு வசதி, அடிப்படை வசதிகள், பள்ளிக்கான உட்கட்டமைப்பு வசதிகள், மதிப்பு கூட்டப்பட்ட மரம் தவிர்த்த பிற வன தயாரிப்புகள், வேளாண் பொருட்கள், மாணவியரின் கல்வி மேம்பாட்டிற்கான திட்டங்கள், பழங்குடியினர் பள்ளிகளில் இணை கல்விசார் செயல்பாடுகள், மாணவியருக்கான விடுதி வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

### 3.1.3 தமிழ் நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டம்

"தொலை நோக்கு திட்டம் தமிழ்நாடு **2023**" அறிக்கையின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்று இந்தியாவிலேயே புதுமையாக்கத்தின் இருப்பிடமாக தமிழ் நாட்டை உருவாக்குவதாகும். இதனை நடைமுறைப்படுத்தும் விதமாக மாண்புமிகு முன்னாள்

முதலமைச்சர் அவர்கள் **08.08.2014** அன்று சட்டமன்றப் பேரவையில் வெளியிட்ட அறிவிப்பின்படி, அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்காக, "தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள்" என்ற ஓர் அமைப்பு மாநிலத் திட்டக்குழுவில் நிறுவப்பட்டுள்ளது. தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டம், புதுமைகளை வளர்ப்பதற்கான செயல்முறை மற்றும் இடர்பாடுகளைக் களைவதற்காக பல்வேறு புத்தாக்கத் திட்டங்கள் மற்றும் முன்னேற்ற நடவடிக்கைகளை விரைந்து செயல்படுத்த நிதி உதவி அளிக்கின்றது. இத்திட்டத்தினை செயல்படுத்த, அரசு ஏற்கெனவே நடைமுறையிலிருந்த பகுதி–II திட்டத்தினை மாற்றியமைத்து புத்தாக்க முயற்சிகளை உள்ளடக்கிய திட்டங்களுக்கு நிதியளிக்கும் பொருட்டு மாநில புத்தாக்க நிதி என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிதியத்திற்காக, **2015–16**ஆம் ஆண்டு தொடக்க நிதியாக ரூ.**150** கோடி

ஒதுக்கீடு செய்தும், பிறகு தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு வருகிறது.

இந்த நிதியைப் பயன்படுத்தி, புத்தாக்க திட்டங்களை கண்டறிவதற்கும், நடைமுறை படுத்துவதற்கும் தொடர்புடைய விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் அரசால் வெளியிடப்பட்டுள்ளன. மொத்தம் **320 புதுமைத் திட்டங்கள் ரூ.632.88 கோடி** மதிப்பில் தமிழ்நாடு புத்தாக்க முயற்சித் திட்டத்தின்கீழ் **2019–2020** வரை பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதுவரை **30** துறைகள் தமிழ்நாடு புத்தாக்க நிதியின்கீழ் ஒதுக்கீடு பெற்றுள்ளன.

**2019–2020** ஆம் ஆண்டு மாநில திட்டக்குழு **ரூ.80.04 கோடி** (மூன்று ஆண்டுகளுக்கு) மதிப்பில் **49 திட்டங்களுக்கு** பரிந்துரை செய்தது. அவற்றில், **48** புதிய திட்டங்களுக்கு **ரூ.79.37** கோடி **(**மூன்று ஆண்டுகளுக்கு**) 2019–20**ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், 2020–2021 ஆம் ஆண்டிற்காக, மாநில திட்டக்குழு **ரூ.60.58 கோடி** (மூன்று ஆண்டுகளுக்கு) மதிப்பில் **9 புதிய திட்டங்களுக்கு** பரிந்துரை செய்துள்ளது.

வேளாண் **மற்றும் அதனை சார்ந்த துறைகளுக்காக இ**துவரை 2019–2020 முதல் 2020–21 (முதல் சுற்று) வரையிலான காலத்தில், தமிழ்நாடு புத்தாக்க முயற்சித் திட்டத்தின்கீழ் **ரூ.21.96 கோடி** பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மண் ஊட்டச்சத்து அளவீட்டு முறையை மேம்படுத்த மென்பொருளை வடிவமைத்து செயல்படுத்தல், கடலில் மீன் பன்முகத் தன்மை மற்றும் உயிர்வளத்தை மேம்படுத்துவதற்காக மீன்பிடி அழுத்தக் குறைப்பு மற்றும் ஏரி பகுதியில் உள்ள மீனவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக செயற்கை ரீப் மீன் திரட்டுதல், தமிழக மீனவ இளைஞர்களுக்கு கடற்கரை உயிர் பாதுகாவலர் மற்றும் நீர் மூழ்குபவர் பயிற்சி, பண்ணைக் குட்டைகளில் பாலித்தீன் உறைகளைப் பயன்படுத்தி

குறுகிய கால நீர் நிலைகளில் வேகமாக வளரக்கூடிய மீன் வளர்ப்பினை மேற்கொள்ளுதல், சத்தியமங்கலம் புலிகள் சரணாலயத்தில் பாதுகாப்பிற்கான கூடு கட்டும் காலனிகள் மற்றும் வாழ்விடங்களை மீட்டெடுத்தல், அகஸ்தியர் பாரம்பரிய பூங்காவில் பண்பாடு மற்றும் இயற்கை பாதுகாப்பு இணைத்தல், போன்ற பல்வேறு திட்டங்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**தொழில் மற்றும் உட்கட்டமைப்பு துறைகளுக்காக** இதுவரை 2019–2020 முதல் 2020–21 (முதல் சுற்று) வரையிலான காலத்தில், தமிழ்நாடு புத்தாக்க முயற்சித் திட்டத்தின் கீழ் **ரூ.45.16 கோடி** பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. சணல் இழையால் உறுதிபடுத்தப்பட்ட குளிர் நிலக்கரி கலவையின் செயல்திறன் குறித்த ஆய்வு, பாம்புகளிலிருந்து விஷப்புரதம் பிரித்தெடுப்பதற்கான ஆய்வகம் நிறுவுதல், உலோகங்கள், காற்று, நீர், தாதுக்கள் மற்றும் கனிமங்களை பகுப்பாய்வு செய்யும் நவீன சோதனை

மையம் ஒன்றினை சேலம் மண்டல ஆய்வகத்தில் நிறுவுதல், திருப்பெரும்புதூர் மற்றும் ஒசூர் தொழிற்பூங்காவில் சிப்காட் தொழில் புதுமை கண்டுபிடிப்பு மையங்களை நிறுவுதல், பட்டு நூற்கண்டினை மேம்பட்ட உலர்த்தியினை வடிவமைத்தல் மற்றும் உருவாக்குதல், ஜெட் தறிகளுக்கு நான்கு வண்ணங்கள் ஊடை செலுத்தும் மின்னணு கருவி நிறுவுதல், அச்சுப் பொறியுடன் கூடிய விற்பனை முனை இயந்திரங்கள் மற்றும் ரேடியோ அதிர்வலை அடையாள இயந்திரங்கள் மூலம் கோ ஆப்டெக்ஸ் விற்பனையை எளிதாக்குதல், மாநகர போக்குவரத்துக் கழக பேருந்துகளில் உடல் அசைவு குறைபாடு உள்ளவர்கள் எளிதில் ஏற/இறங்க மின் தூக்கி வசதியுடன் கூடிய கதவு பொருத்துதல் போன்ற பல்வேறு திட்டங்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து துறைகளுக்காக** இதுவரை 2019–2020 முதல் 2020–21 (முதல் சுற்று) வரையிலான காலத்தில், தமிழ்நாடு புத்தாக்க முயற்சித்

திட்டத்தின் கீழ் **ரூ.45.71 கோடி** பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. தொடர் கவனிப்புக்கான அரசு மருத்துவமனைகளில் ஆக்சிஜன் உற்பத்திக் கூடத்தை ஏற்படுத்துதல், மீசென்சைமல் ஸ்டெம் செல்களின் செக்திடோம்களை கொண்டு குணமாகாத காயங்களுக்கு சிகிச்சை அளித்தல், குடல் அழற்சி நோய் மற்றும் குடல் புண் சிகிச்சைக்கான பழையசோறின் ஆய்வு, அவசர சிகிச்சை முன்னெடுப்பு திட்டத்தின் கீழ், ராஜீவ்காந்தி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மூளையில் ஏற்படும் இரத்த அடைப்புகளை நீக்கும் கேத் லேப் கருவி மற்றும் வசதிகளை ஏற்படுத்துதல், சென்னை எழும்பூரில் உள்ள தாய் சேய் நல மருத்துவமனையில் பிரசவ அறையை நவீனபடுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**கல்வி மற்றும் இளைஞர் நலன் துறைகளுக்காக** இதுவரை **2019–2020** முதல் **2020–21** (முதல் சுற்று) வரையிலான காலத்தில், தமிழ்நாடு புத்தாக்க முயற்சித்

திட்டத்தின் கீழ் **ரூ.26.34 கோடி** பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின் ஆவணக் காப்பக வலைதளப்பக்கம், பள்ளிகளில் புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கான மையம் உருவாக்குதல், அடிப்படை அறிவியலில் முதுகலை மாணாக்கர்களுக்கு கோடைக்கால பயிற்சி முகாம், தமிழ்நாடு மாணவ அறிவியலாளர்கள் மாநாடு நடத்துதல், மாற்றுத்திறனாளிகளுக்கான பகுதி மற்றும் முழுமையாக தானியங்கக்கூடிய நுண்ணறிவுள்ள புற உடற்கூடு மற்றும் செயற்கை உருவாக்கம், சாகச மற்றும் பாரம்பரிய விளையாட்டு மையம் போன்ற பல்வேறு திட்டங்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**சுற்றுலா மற்றும் ஏனைய துறைகளுக்காக** இதுவரை 2019–2020 முதல் 2020–21 (முதல் சுற்று) வரையிலான காலத்தில், தமிழ்நாடு புத்தாக்க முயற்சித் திட்டத்தின் கீழ் **ரூ.0.79 கோடி** பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. சென்னை அரசு அருங்காட்சியத்தில் "பேசும் மரம்– இயங்கும் மாதிரி"

அமைத்தல், சிறார் அருங்காட்சியகத்தில் புனை மெய்யாக்க நிகழ் காட்சியமைப்பு அமைத்தல் போன்ற பல்வேறு திட்டங்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

### 3.1.4 சிறப்புப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாட்டில் **2015–2016** ஆம் ஆண்டிலிருந்து சிறப்புப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் துவங்குவதற்கு முன்னர் **1975–1976** ஆண்டு முதலாக மத்திய அரசின் **90** சதவிகித நிதி உதவியுடனும், **10** சதவிகித நிதிகடன் அடிப்படையில் பெற்று பின்னர் மாநில பங்களிப்புடனும், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் செயற்பட்டு வந்தது.

**2015–16** மத்திய வரவு செலவு திட்டத்தில் மத்திய அரசு **2015–2016**ஆம் ஆண்டு முதல் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத்

தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டங்களுக்கான மத்திய அரசின் நிதியுதவி நிறுத்தப்படும் என்று அறிவித்தது. மேலும், மேற்படி திட்டங்களை மாநில அரசு, தன் சொந்த மாநில நிதியிலிருந்து தொடரலாம் எனவும் அறிவித்தது. அதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு அரசு **2015–2016** ஆண்டு பட்ஜெட் உரையில் ரூ.**75.00** கோடி நிதி உதவியுடன் தமிழகத்தில் அமைந்துள்ள மலைப்பகுதிகளில் வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் சிறப்புப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு புதிய திட்டத்தை அறிவித்தது.

சிறப்புப்பகுதி மேம்பாட்டு திட்டமானது நிர்வாகம் மற்றும் கள ஆய்வு பணிகளுக்காக இரண்டு அலகுகளாக செயல்படுத்தப்பட்டு, அலகு–**1** ஆனது திட்ட இயக்குனர், மலைப்பகுதி மேம்பாட்டு வளர்ச்சி திட்டம் அவர்களைத் தலைமையாகக் கொண்டு நீலகிரி, கோயம்புத்துர், திருப்பூர், மற்றும் ஈரோடு ஆகிய நான்கு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அலகு–**2** ஆனது குழுமத் தலைவர் (நிலப்

பயன்பாடு) மாநில திட்டக்குழுவின் தலைமையில் திண்டுக்கல், மதுரை, தேனி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய **6** மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது

தமிழ்நாட்டில் சிறப்புப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்த நிர்ணயிக்கப்பட்ட பகுதியானது கடல் மட்டத்தில் இருந்து **600** மீட்டருக்கு மேலான மலைப்பகுதிகளை இலக்காக கொண்டுள்ளதோடு பிற திட்டங்களில் சேர்க்கப்படாத மலையடிவாரப் பகுதிகளை உள்ளடக்கியதாகும்.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மேற்குத் தொடர்ச்சி மலைமேம்பாட்டுத் திட்டங்களின் நோக்கான பல்லுயிர் பரவலின் நீடித்த பயன் கருதி சுற்றுச் சூழல் பாதுகாப்பு, சுற்றுச் சூழல் மறுசீரமைப்பு போன்ற பணிகளை மேற்கொள்ளல், உள்ளூர் சமூகத்தின் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்தல், பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் நீடித்த வாழ்வாதாரம்

ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு சமுதாய பங்களிப்பை உறுதி செய்யும் விதமாக திட்ட வடிவமைப்பு மற்றும் செயல் திட்டம் உருவாக்குதல் போன்ற பணிகளை மக்களின் பங்களிப்போடு கூடிய நீர்ப்பிடிப்புப் பகுதியை அடிப்படையாகக் கொண்ட திட்ட அமைப்பின் வளர்ச்சிக்கு உறுதுணையாக திறன் பொறுப்புடைமை மற்றும் வெளிப்படைத் தன்மை உறுதி செய்தல் ஆகியவற்றை தொடர்ந்து செயல்படுத்துவதோடு அல்லாமல், இத்திட்டத்தில் வனம், குடியிருப்புப் பகுதிக்கு அருகில் அமையப்பெறாத மண்வளம் மற்றும் நீர் வளத்திற்கு சவாலாகப் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியை ஒட்டி அமைந்திருக்கும் இடைப்பட்ட பகுதியின் வளர்ச்சியில் கவனம் செலுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டமானது, நீர் மற்றும் நில வளர்ச்சிக்கும் மனித வாழ்வாதாரத்திற்கும் ஒரு தொடர்பை எற்படுத்துதலும், சுற்றுச் சூழல் பாதுகாப்பு, நீர்வாழ் உயிரினங்கள் பாதுகாப்பு மற்றும் நுண்நீர் பிடிப்புப்

பகுதி அளவில் மலைவாழ் மக்களின் வாழ்வாதார வாய்ப்பை மேம்படுத்துதலும் இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

சிறப்புப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்பட வேண்டிய அமைப்பு, பணிகள் மற்றும் வழிகாட்டி, அரசாணையுடன் இணைத்து வழங்கப்பட்டுள்ளது (அரசாணை நிலை எண்.40, திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (தொ.நு.1) துறை, நாள்.04.03.2016). சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மேலாண்மைப் பணிகளைக் கவனிக்க திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மாநில அளவிலான ஒருங்கிணைப்புச் செயல் துறையாகச் செயல்பட்டு வருகிறது.

மண்வளப் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மற்றும் வன பாதுகாப்பு, தோட்டக்கலை, வேளாண்மை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் மேம்பாடு, கால்நடை வளர்ப்பு, நெடுஞ்சாலை மற்றும் கிராமப்புற சாலைகள் அமைத்தல், நகர்ப்புற மற்றும் ஊரக,

உள்ளாட்சி அமைப்பின் கட்டமைப்பில் இடைவெளி நிரப்பும் விதமாக பணிகளை மேற்கொள்ளுதல், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம், நீர்வள மேம்பாடு மற்றும் மீன் வளர்ப்பு போன்ற பணிகளை தொடர்புடைய துறைகள் மூலம் மேற்கொள்ளும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.இத்திட்டமானது, மலைவாழ் மக்களின் வாழ்வாதார வாய்ப்பை மேம்படுத்தும் வகையிலும், மேலும், இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்படும் தர்மபுரி, கிருஷ்ணகிரி, திண்டுக்கல், மதுரை, தேனி, கோயமுத்தூர் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் செயற்படுகிறது. பணியின் தன்மையானது மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத்தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் செயற்பட்டு வந்த திட்டப் பணிகளே ஆகும்.

மாநில அளவில் உருவாக்கப்பட்ட உயர்நிலைக்குழு இத்திட்டத்திற்கான வழிகாட்டுதல்களை பின்பற்றியும், நீடித்த வளர்ச்சி

இலக்குகளைஅடைவதற்கான நோக்கத்துடனும் திட்டங்களுக்கு ஒப்புதல்அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்காக ரூ.75.00 கோடி நிதி ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு இதுவரை பிப்ரவரி, 2019 முடிய 1511 திட்டங்களுக்கு ரூ.200.74 கோடி அளவிற்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. 2019–20ஆம் ஆண்டிற்காக 438 திட்டங்களுக்கு ரூ.86.00 கோடி அளவில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது,

சிறப்புப்பகுதி மேம்பாட்டுத் திட்டப்பணிகளை விரைவாக கண்காணிக்கும் பொருட்டு இணையதளத்தில் செயல்படும் வகையில் வலை கண்காணிப்பு அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

## 3.1.5 தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியம்

அரசாணை எண் 58, திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை (மாதிகு) நாள் 10.02.2011 ன்படி தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியம்

என்ற ஒரு நிலையான வாரியம், மாநிலத் திட்டக்குழு துணைத் தலைவரை தலைவராக கொண்டு உருவாக்கப்பட்டது. இவ்வாரியத்தின் முக்கிய நோக்கங்களாவன :

- நில வளத்தை மதிப்பீடு செய்தல், நிலக்கொள்கையை வகுப்பதில் அரசுக்கு அறிவுரைகள் வழங்குதல், மாறிவரும் நிலப்பயன்பாட்டிற்கு ஏற்ப ஒரு அறிக்கை மற்றும் சாத்தியமான முன்னுரிமைகள் போன்றவற்றை தயாரித்தல்.
- மாறிவரும் சுற்றுச்சூழலின் காரணிகளான மாசு, புவி வெப்பமயமாதல் ஆகியவை குறித்து உறுதியான, அறிவியல் சார்ந்த கொள்கை குறுக்கீடுகள் பற்றி அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.
- தமிழ்நாடு நிலப்பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியமானது தரவு தளத்தை உருவாக்குவதன்

மூலம் நிலம் மற்றும் நீர் வளங்களை பாதுகாக்கவும், நிர்வகிக்கவும், திட்டமிடல் மற்றும் விழிப்புணர்வு திட்டத்திற்கு ஒரு பயனுள்ள பங்கை வகிக்கும்.

2011 - 2012 முதல் 2018 - 2019 வரை மொத்தம் 49 ஆராய்வுகளுக்கு ரூ. 544.94 இலட்சம் செலவிடப்பட்டுள்ளன, அவற்றில் 42 ஆராய்வுகள் நிறைவடைந்துள்ளன. மீதம் ஏழு (07) ஆராய்ச்சி ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. இதனுடன் ரூ.52.16 இலட்சத்திற்கு பத்து (10) பயிலரங்கங்கள் மேலே குறிப்பிட்டுள்ள காலவரையரைக்குள் நடத்தப்பட்டுள்ளது.

2019–20–ஆம் ஆண்டிற்கு ரூ.80.00 இலட்சம் இவ்வாராய்ச்சி வாரியத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இவை நிலவளம் மற்றும் நீர் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மற்றும் வன சூழல் அமைப்பு, விவசாயம், வாழ்வாதாரம்,

காலநிலை மாற்றம் மற்றும் பேரழிவு தணிப்பு போன்ற துறைகளுக்கு உரியவை.

**2019–2020–**ஆம் ஆண்டிற்கு பத்து ஆராய்ச்சி ஆய்வுகள், மூன்று பயிலரங்கங்கள் மற்றும் ஒரு கருத்தரங்கம் நடத்த ரூ.**63.53** இலட்சம் மற்றும் ரூ.**5.81** இலட்சம் முறையே அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும், ஓர் ஆராய்ச்சி ஆய்வு அனுமதிக்கப்பட்டுள்ளது.

## 3.1.6 முன்னேற விழையும் மாவட்டங்கள்

முன்னேற விழையும் மாவட்டங்கள் என்ற இத்திட்டம் 2017–ம் ஆண்டு மைய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு நிதி ஆயோக்கால் நிர்வகிக்கப்படுகிறது. வறுமை, கல்வி, நல வாழ்வு, ஊட்டச்சத்து மற்றும் அடிப்படை கட்டமைப்பு ஆகிய பிரிவுகளின் கீழ் 11 முக்கிய காரணிகளில் மாவட்டங்களின் நிலையினை அடிப்படையாக கொண்டு 115 மாவட்டங்களை

பின்தங்கிய மாவட்டங்களாக மைய அரசால் இனங்காணப்பட்டன.

மைய அரசின் உள் துறையால், இடதுசாரி தீவிரவாத்தால் பாதிக்கப்பட்டவை என தெரிவு செய்யப்பட்ட 35 மாவட்டங்களும் இந்த 115 மாவட்டங்களில் அடங்கும்.

இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட 115 மாவட்டங்களில் தமிழகத்தில் இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய இரு மாவட்டங்கள் முன்னேற விழையும் மாவட்டங்களாக இனங்காணப்பட்டுள்ளன.

நித்தி ஆயோக் மற்றும் மாவட்ட ஆட்சியரின் தொடர்பு மூலம் செயல்படுத்தும் இத்திட்டத்தை மைய அமைச்சகத்தின் இணைச் செயலர் நிலை மற்றும் அதற்கு மேலுள்ள நிலையிலான ஒரு மைய பற்று அலுவலர் மாவட்டங்களை மேற்பார்வையிட்டு, கள ஆய்வு மேற்கொண்டு நித்தி ஆயோக்கிற்கு அறிக்கை வழங்குவார்கள். மேலும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மைய அரசின் ஒரு அமைச்சகம்

முன்னேற்றத்தினை மேற்பார்வையிடவும் வழிநடத்தவும் நியமிக்கப்பட்டுள்ளது. இவற்றோடு, மத்திய அமைச்சர் ஒருவரும் சில மாவட்டங்களுக்கு அதன் வளர்ச்சி முன்னேற்றத்தை ஆய்வு செய்யவும் வழிநடத்தவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இத்திட்டத்தில் நலவாழ்வு மற்றும் ஊட்டச்சத்து, கல்வி, வேளாண்மை மற்றும் நீராதாரங்கள், அனைவருக்குமான நிதிசேவைகள் மற்றும் திறன் மேம்பாடு மற்றும் அடிப்படை கட்டமைப்பு ஆகியவற்றில் முக்கிய கவனம் செலுத்தப்படுகின்றன. மாவட்டங்களின் மாதாந்திர முன்னேற்றங்களுக்கான நிகழ்நேர விவரங்களை நேரடியாக பெற்றிடும் வகையிலான இணையதளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாவட்டங்களின் முன்னேற்றங்களை அளவிட 49 முக்கிய செயல்பாட்டுக் காரணிகள் தெரிவு செய்யப் பட்டுள்ளன.

மாவட்டங்கள் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளில், பிரிவு வாரியாக மற்றும் எல்லா பிரிவுகளுக்கும் மொத்தமாக சேர்ந்து அடைந்த முன்னேற்றங்கள் கணக்கிடப்பட்டு அதன் அடிப்படையில் தரவரிசை படுத்தப்படுகின்றன. மாவட்டங்களிடையே போட்டியினை ஏற்படுத்தும் முகமாக கடந்த மாத்திற்கும் நிகழ்கின்ற மாதத்திற்கும் இடையேயான முன்னேற்றம் ஒவ்வொருமாதமும் கணக்கிடப்பட்டு தரவரிசைப்படுத்தப்படுகின்றன.

மாநில அரசுகளும் இம்மாவட்டங்களுக்கு கூடுதலாக உதவி வழங்குகின்றன. நம் மாநில அரசு இம்மாவட்டங்களின் முன்னேற்றத்திற்கு உதவிடும் வகையில், ஒவ்வொரு மாவட்டத்திற்கும், அரசுச் செயலர் நிலையில் ஒரு பற்று அலுவலரை நியமித்துள்ளது. மைய அரசின் பொதுத்துறை நிறுவனங்கள் தமது சமூக பொறுப்பு நிதியிலிருந்து இம்மாவட்டங்களின் முன்னேற்றத்திற்கு செலவிட அறிவுறுத்தப்பட்டுள்ளன.

## நித்தி ஆயோக்கால் வழங்கப்படும் நிதி

இத்திட்டத்திற்கு நித்தி ஆயோக் கீழ் கண்ட விவரப்படி, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை வழங்கும் அயல்நாட்டு நிதி வாயிலாக உதவி வழங்குகின்றது.

| வ. எண் | விவரம் | ஒதுக்கீடு (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளை அடையும் வகையில் செயல்படுத்துவதில் போட்டி முறையில் தர வரிசைமாவட்டங்களுக்கு 20 மாதத்திற்கு மாதம் 30 கோடி வீதம் (சாளரம் - 1) | 600 கோடி |
| 2 | மைய அரசின் செயலர்கள் அடங்கிய அதிகாரம்படைத்த குழுவால் அனுமதிக்கப்படும் ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களுக்கான சிறப்பு திட்டங்களுக்கான நிதி (சாளரம் - 2 ) | 350 கோடி |
| 3 | இந்தியாவில், நீடித்த வளர்ச்சி இலக்குகளின் முன்னேற்றத்தை கண்காணிக்க, நித்தி அயோக்கில் நிர்வாக வசதி, தேர்ந்தெடுக்கப்பட்ட தரவுகளை மூன்றாம் அமைப்பின் களஆய்வு வழியாக உறுதி செய்தல், மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களிடையே போட்டியினை ஏற்படுத்துதல், மாவட்டம் மற்றும் அதற்கு கீழ்நிலையிலுள்ள அலுவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தல் (சாளரம் - 3) | 24 கோடி |
| | **மொத்தம்** | **974 கோடி** |

**இத்திட்டத்தின் தமிழக மாவட்டங்களின் செயல்பாடு**

ஏப்ரல் 2018-ல் விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய இரு மாவட்டங்கள் மேற்குறிப்பிட்ட 5 துறைகளில் முன்னேற்ற நிலைக்கான ஒட்டுமொத்த மதிப்பெண் முறையே 45.6 மற்றும் 46.8ஆகும்.

விருதுநகர் மாவட்டம் பிப்ரவரி – மார்ச் 2019 காலத்தில் அடிப்படை கட்டமைப்பு பிரிவில் எய்திய முன்னேற்த்திக்காக இந்திய அளவில் தரவரிசையில் முதன்மை மாவட்டமாக பட்டியலிடப்பட்டு திட்டம் சாரா நிதியாக ரூபாய் 3 கோடி பரிசு பெற்றுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம் ஏப்ரல் - மே 2019 காலத்தில் வேளாண்மை மற்றும் நீர் ஆதாரங்கள் பிரிவில் எய்திய முன்னேற்றத்திற்காக இந்திய அளவில் தரவரிசையில் முதன்மை மாவட்டமாக

பட்டியலிடப்பட்டு திட்டம் சாரா நிதியாக ரூபாய் 3 கோடி பரிசு பெற்றுள்ளது,

இவ்விருது தொகையில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் தொடர்புடைய மாவட்ட ஆட்சியரால் தேர்வு செய்யப்பட்டு மைய பற்று அலுவலர் வாயிலாக நேரடியாக நித்தி ஆயோக்கிற்கு ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்படுகின்றன.

இவ்விரு மாவட்டங்களும் குறிப்பிடத்தகுந்த முன்னேற்றங்களை எய்தி டிசம்பர் 2019 மாதத்தில், விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் ஒட்டுமொத்த குறியீட்டு மதிப்பெண் முறையே 63 மற்றும் 61.9 பெற்றுள்ளன.

## 3.2 பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை

பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை (DOES) மாநிலத்தின் புள்ளிவிவர நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து மாநில முகமை புள்ளிவிவர

நிறுவனமாக செயல்படுகிறது. வேளாண்மைத்துறை புள்ளிவிவரங்கள், தொழில்துறை வீட்டுவசதி மற்றும் விலைப்புள்ளிவிவரம், சந்தை மற்றும் விலைப்புள்ளி விவரம், மொத்த மற்றும் நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்கள், மாநில வருவாய் மற்றும் சமூக பொருளாதார ஆய்வுகள் போன்றவற்றுக்கான இது குறித்த தரவுகளை சேகரித்தல், தொகுத்தல், பகுப்பாய்வு செய்தல், மற்றும் அறிக்கைகளை வெளியிடுதல் ஆகியவை பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் முக்கிய செயல்பாடுகளாகும். தமிழக அரசு மற்றும் இந்திய அரசுக்கு பல்வேறு சமூக பொருளாதார காரணிகளை உரிய நேரத்தில் போதுமான, மற்றும் நம்பகமான முறையில் சரியான நேரத்தில் தகவல்கள் அளித்து, பொருத்தமான கொள்கை முடிவுகளை எடுக்கவும், அரசினுடைய நலத்திட்டங்களை திறம்படச் செயல்படுத்தவும் உதவுகின்றது.

### 3.2.1 துறையின் செயல்பாடுகள்

மாநில வருவாய், மாவட்ட வருவாய், தொழில்துறை உற்பத்தி குறியீட்டெண், நுகர்வோர் விலைக் குறியீட்டெண் மற்றும் மொத்த விலைக் குறியீட்டெண் போன்ற பல்வேறு பொருளாதார அளவீடுகளுக்கான மதிப்பீடுகள் கணிக்கப்பட்டு, மத்திய மற்றும் மாநில அரசுகளால் அவ்வப்பொழுது ஒப்படைக்கப்படும் சிறப்பு கணக்கெடுப்புகள், ஆய்வுகள் போன்றவற்றை மேற்கொண்டு அவற்றிற்குரிய பல்வேறு அறிக்கைகள் தயாரித்து அரசு தேவைகேற்ப வழங்குவது இத்துறையின் முக்கிய பணியாகும். புள்ளிஇயல் துறை ஆண்டுதோறும் தமிழ்நாடு புள்ளிஇயல் கையேடு, பருவம் மற்றும் பயிர்அறிக்கை, மற்றும் பொருளாதார நிலைகுறித்த ஆய்வு அறிக்கைகளை ஆண்டுதோறும் வெளியிடுகிறது. இது மாநில அரசுகளில் பல்வேறு துறைகளின் தரவு தேவைகளுக்கு உடனடி பார்வை கையேடுகளாகப் பயன்படுகிறது. புள்ளிஇயல்

துறையின் அறிக்கைகள் ஆராய்ச்சி நிறுவனங்களாலும், பொதுமக்களாலும் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. தமிழகத்தின் பல்வேறு துறைகளில் பணியில் அமர்த்தப்பட்டுள்ள புள்ளிஇயல் துறையின் திறமையாக தொழில்நுட்ப பணியாளர்கள் அந்தந்த அயற்பணி துறைகளால் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் மற்றும் சமூக–பொருளாதார திட்டங்களை கண்காணிக்கவும், மதிப்பாய்வு செய்யவும் தங்களுடைய பயனுள்ள பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.

சர்வதேச அளவில், பல்வேறு நாடுகள் பொதுமக்களுக்கு சிறந்த சேவை வழங்குவதற்கான ஆதார அடிப்படையிலான கொள்கை முடிவுகளின் அடிப்படையில் சிறந்த மேலாண்மை நடவடிக்கைகளை செயல்படுத்தத் தொடங்கியுள்ளன. இந்த இலக்கை அடைய வேண்டும் என்ற நோக்கில், அரசு கொள்கை முடிவுகளை எடுப்பதற்கும், திட்டங்கள் தீட்டுவதற்கும் தேவையான அடிப்படை விவரங்களை

அளிப்பதற்காகவும் மற்றும் சேவை விநியோகத்தினை மேம்படுத்தவும் இது போன்ற சிறப்பு செயலாக்கத்தினை நம்முடைய மாநிலத்திலும் செயல்படுத்தும் விதமாக புள்ளிஇயல் துறையில் சில புதிய திட்டங்களை அரசு தொடங்கியுள்ளது.

## 3.2.2 துறையின் முயற்சிகள்

### 1. புள்ளி விவரங்கள் பகுப்பாய்வு மையம் நிறுவுதல் (DAU)

பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை உலக சூழலுக்கேற்ப புள்ளி விவரங்களை வழங்குதோடு மட்டுமல்லாமல் அத்தரவுகளை சிறப்பாக ஆய்வு செய்யும் ஒரு பிரிவாகவும் செயல்படுகிறது. பல்வேறு அரசுத் துறைகளின் செயல்பாட்டின் போது உருவாகும் அளவற்ற தரவுகளை ஆராய்ந்து, அவற்றின் மூலம் செயல்படுத்தக்கூடிய பயனுள்ள அறிக்கைகளாக அளிப்பது அரிதாகிறது. எனவே, **2015–16** ஆம்

ஆண்டின் வரவு செலவுத் திட்ட அறிக்கை உரையில் பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை, தமிழ்நாடு மின் ஆளுமை முகமையுடன் இணைந்து 'புள்ளி விவரங்கள் பகுப்பாய்வு மையம்' உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இம்மையம் தரவு அடிப்படையிலான உள்ளீடுகளை, உயர்மட்டக் கொள்கைகளை உருவாக்கும் அமைப்புகளுக்கு ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட கொள்கை வகுப்பை அளிக்க உதவுகின்றது. இந்தியாவில் இதுபோன்ற மையத்தினை நிறுவிய முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும்.

நவீன தகவல் தொழில்நுட்பங்களை மற்றும் பயன்பாட்டு மென்பொருளை பயன்படுத்தி தொடர்புடைய தரவுகளை வழங்கி விரைவில் முடிவெடுக்க இம்மையம் உதவுகிறது. இம்மையம் மாநில அளவிலான தகவல் சேகரிப்பு இணைய முகப்பு ஒன்றை உருவாக்கி, அதன் மூலம் பல்வேறு துறைகளின் விவரங்களை விரைவாக மற்றும்

துல்லியமாகத் தொகுத்து தேவையின் அடிப்படையில் அரசுக்கும் பிற துறைகளுக்கும் வழங்குவது இம்மையத்தின் சிறப்பம்சமாகும்.

**முன்னோடித் திட்டங்கள்**

ஆரம்பத்தில், இம்மையத்தில் புள்ளிஇயல் உத்தியைப் பயன்படுத்தி தீர்க்கமான மற்றும் விரிவான பகுப்பாய்வு உருவாக்கத் திட்டமிடப்பட்டது. புள்ளி விவர பகுப்பாய்வு மையம் தற்போது மூன்று முன்னோடி திட்டங்களை ஜே–பால் தெற்கு ஆசியாவுடன் இணைந்து நிறைவு செய்துள்ளது.

- மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையுடன் இணைந்து முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கூற்றுகளின் தரவரிசைகளைப் பகுப்பாய்வு செய்தல்.

- ஐந்தாவது மாநில நிதி குழுவினால் சேகரிக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் தரவுகளை ஆய்வு செய்தல்.
- காணாமல் போன நபர்களை, அடையாளம் காணப்படாத இறந்த உடல்களுடன் ஒப்பிடுவதற்கான கருவிகளை மாநில குற்ற ஆவண காப்பகத்துடன் இணைந்து உருவாக்குதல்.

## கொள்கை கருத்தரங்கு தொடர்

புள்ளி விவரங்களைப் பகிர்தலின் அவசியம் என்பது குறித்து ஒரு கருத்தரங்குத் தொடரை இம்மையம் உருவாக்கியுள்ளது. இக்கருத்தரங்கின் முக்கிய நோக்கம், அரசுக் கொள்கை முனைவோர்கள், ஆராய்ச்சியாளர்கள், தரவுகள் பகுப்பாய்வாளர்கள் மற்றும் மற்ற பகுப்பாளர்கள் ஆகிய இதுபோன்ற பிற தரப்பினரையும் ஒரு அமைப்பின் கீழ் கொணர்ந்து,

அதன்மூலம் தற்போது உள்ள தரவுகளைக் கொண்டு, கொள்கை கேள்விகளுக்கு அரசு தகுந்த விளக்கம் அளிக்க உதவும்.

**திட்டங்கள்**

**2019–2020** ஆம் ஆண்டு, சம்பந்தப்பட்ட துறையின் விருப்பத்திற்கேற்ப மூன்று திட்டங்களுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

**i. மாநில குற்ற பதிவு நிறுவனம் (SCRB)**

இடஞ்சார்ந்த தரவைப் பயன்படுத்தி குற்ற வரைபடம் தயாரித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் தொகை **ரூ.30.58** லட்சம் / மாநில குற்றப்பதிவு நிறுவனம் மூலம் பகுப்பாய்வு செய்தல்.

**ii. வணிக வரித் துறை**

ஜிஎஸ்டி வரி சேகரிப்பை மேம்படுத்த இயந்திர மூலம் கற்றலைப் பயன்படுத்துதல் தொகை **ரூ.39.94**

லட்சம் – வணிகவரி துறை, புள்ளிஇயல் பகுப்பாய்வு மையம் மற்றும் ஜே–பால் நிறுவனம் மூலம் பகுப்பாய்வு செய்தல்.

### iii. வீட்டுவசதி மற்றும் நகரப்புற வளர்ச்சித் துறை

பிரதம மந்திரி குடியிருப்புத்திட்டம் மேலாண்மை தகவல் அமைப்பு - Portal மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்தல் வீடுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை மற்றும் ஜே–பால் நிறுவனம் மூலம் பகுப்பாய்வு செய்தல்.

## நிதி ஒதுக்கீடு

புள்ளிவிவரப் பகுப்பாய்வு மையத்தினை நிறுவவும், அதன் திறனை அடையாளம் காணவும் மற்றும் திட்டங்களை எடுக்கப்பட்ட துறைகளுக்கு பெரியளவு தரவுகளை பகுப்பாய்வு செய்யவும் தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் நிதியிலிருந்து, அரசாணை (பலவகை) எண்.20, திட்டம், வளர்ச்சி

மற்றும் சிறப்பு முயற்சிகள் (பு.இ.2(ம)ம) துறை, நாள் **26.02.2016–ல்** மொத்த செலவினத் தொகையாக **2015–16** ஆம் ஆண்டு ரூ.**428.66** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2. தமிழ்நாட்டிலுள்ள குடும்பங்களின் சமூக பொருளாதார வளர்ச்சி குறித்த குழுப்பட்டியல் ஆய்வு (TNHPS)

தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சியை அறிந்து கொள்வது தமிழ்நாட்டிலுள்ள குடும்பங்களின் சமூக பொருளாதார வளர்ச்சி குறித்த குழுப்பட்டியல் ஆய்வின் நோக்கமாகும். தனிநபர், குடும்பங்கள் ஆகியவற்றை முக்கிய ஆதாரமாகக் கொண்டு சமுதாயம் மற்றும் பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் வளர்ச்சியை கண்டறியும் வகையில் இவ்வாய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சி குறித்த விவரங்களைத் திட்டமிடுபவர்களும் மற்றும் பொது

மக்களும் உரிய நேரத்தில் தேவையான புள்ளி விவரங்கள் இந்த ஆய்வின் மூலம் கிடைக்கப்பெறும்.

இந்த ஆய்வானது முன் அடிப்படை ஆய்வு, அடிப்படை ஆய்வு மற்றும் இறுதி நிலை என மூன்று கட்டங்களாக மூன்று ஆண்டுகள் தொடர் ஆய்வாக நடத்தப்படுகின்றது. இந்த ஆய்வு பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை, சென்னை மேம்பாட்டு ஆய்வு நிறுவனம், அமெரிக்க மிச்சிகன் பல்கலைக் கழக ஆராய்ச்சி ஆய்வு மையம் ஆகியோருடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது. இவ்வாய்வின் முக்கிய அம்சமானது கையடக்க கணினி உதவியுடன் தனிப்பட்ட நேர்காணலில் இலக்க முறையில் விவரங்களை சேகரிப்பதாகும்.

முன் அடிப்படை ஆய்வு / வீடுகளை பட்டியலிடும் ஆய்வு பணி நிறைவடைந்துள்ளது. சுமார் **2,40,000** குடும்பங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. பதிலளிக்காத வீடுகளில் மீண்டும் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. தரவுகளை செம்மைபடுத்தும் /

தூய்மைப்டுத்தும் பணி முடிவடைந்துள்ளது. மாவட்ட அளவிலான மதிப்பீடுகள் கணக்கிடப்படுகின்றது. அடிப்படைக் கணக்கெடுப்பிற்கான கேள்வித்தாள் தயாரிக்கப்பட்டு இறுதி செய்யப்படுகிறது. இறுதி செய்யப்பட்டவுடன் இவை பிளெய்ஸ் (Blaise) மென்பொருள் மூலம் குறியிடப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்விற்காண பயிற்சி அமெரிக்க மிச்சிகன் பல்கலைக்கழக ஆராய்ச்சி மையம் மூலம் புள்ளிஇயல் துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட உள்ளது, இவ்வாய்வில் பணிபுரியும் அலுவலர்களுக்கு திறன்வளர்ச்சி மூலம் பிளெய்ஸ் மென்பொருள் மூலம் நேர்காணல் செயல்பாடுகளின் முறை, தரவுகளின் பகுப்பாய்வு மற்றும் அறிக்கை எழுதுதல் ஆகியவற்றில் திறன் மேம்படுத்திக்கொள்ள உலக வங்கி அறக்கட்டளை நிதி உதவியுடன் அமெரிக்க மிச்சிகன் பல்கலைக்கழகத்திற்கு 1 இலட்சம் அமெரிக்க டாலர் (ரூ.75 இலட்சம்) நிதி உதவி வழங்குகிறது. இத்துறையிலிருந்து அலுவலர்கள் அமெரிக்க

மிச்சிகன் பல்கலைக்கழகத்திற்கு விரைவில் செல்ல உள்ளனர்.

## நிதி ஒதுக்கீடு

தமிழ்நாடு குடும்பங்களின் சமூக பொருளாதார வளர்ச்சி குறித்த குழுப்பட்டியல் ஆய்வு திட்டத்திற்கு தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் நிதியிலிருந்து அரசாணை (பலவகை) எண்.19, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (மா.தி.கு) துறை, நாள் 26.02.2016ல், மொத்த திட்ட தொகையாக ரூ.390.00 இலட்சம் மூன்று ஆண்டுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3. தமிழகத்திலுள்ள வயது முதிர்ந்தோரின் சமூக பொருளாதார நிலை குறித்த குழுப்பட்டியல் ஆய்வு:

வயது முதிர்ந்தோரின் சமூக பொருளாதார நிலை, உடல்ரீதியாக மற்றும் பொருளாதாரரீதியாக மற்றவர்களை சார்ந்திருத்தல், அறிவாற்றல் மற்றும்

நல்வாழ்வு ஆகியவற்றை உட்கொண்ட சுகாதார நிலை ஆகியவற்றை அறிதல் மற்றும் சுகாதார அமைப்பு மற்றும் சமுக பாதுகாப்பு மற்றும் அணுகுமுறை ஆகியவற்றை அறிந்து கொள்வது இந்த குழுப் பட்டியல் ஆய்வின் நோக்கமாகும். வயது முதிர்ந்தோரின் சமூக பொருளாதார நிலையினைக் குறித்து தரவு தளம் உருவாக்கப்படும். மேலும், வயது முதிர்ந்தவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த தேவைப்படும் இலக்குகளை அடைய ஒரு தனித்துவமான தளத்தை இந்த ஆய்வு வழங்கும்.

இந்த ஆய்வு பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை, அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வகம் தெற்கு ஆசியா, (ஜே–பால் தெற்கு ஆசியா) நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து மூன்றாண்டுகள் தொடர் ஆய்வாக நடத்தப்படும். இந்நிறுவனமானது தொழில்நுட்ப ஆலோசகராகவும், தரக்கட்டுப்பாட்டாளராகவும் செயல்படும். இவ்வாய்வில் சுகாதார அளவீடுகள்

மற்றும் உயிர் குறிப்பாண்கள் பற்றிய விவரங்களும் சேகரிக்கப்படுகின்றன.

மனித வளர்ச்சி குறியீடு மற்றும் சார்ந்திருத்தல் விகிதம் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு சென்னை (பெருநகர பகுதி), திருவண்ணாமலை, தருமபுரி, திருச்சி, கன்னியாகுமரி ஆகிய ஐந்து மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

வீட்டுப் பட்டியல் கணக்கெடுப்பு பணி ஜீலை–2018 ல் முடிவடைந்துள்ளது. சுமார் 92,000 குடும்பங்கள் இந்த ஐந்து மாவட்டங்களில் களப்பணி ஆய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

அடிப்படை ஆய்வு பணி ஜீன் 2019ல் முடிவுற்றுள்ளது. 4,739 குடும்பங்களில் 6,294 வயது முதிர்ந்தவர்கள் உள்ளனர் என அடிப்படை ஆய்வில் உள்ள வீட்டுப்பட்டியல் கணக்கெடுப்பில் உள்ளதாக பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை ஆய்வின் மூலம் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. பொதுசுகாதாரதுறை மூலம் 4,496 வயது

முதிர்ந்தவர்களிடமிருந்து சுகாதார அளவீடுகள் விவரம் சேகரிக்கப்பட்டுள்ளது. திட்டப் பகுப்பாய்வு மேற்கொள்ளும் பணி முடிவுபெற்றுள்ளது. அடிப்படை ஆய்வின் அறிக்கை வழங்கப்பட்டுள்ளது ஜே—பால் நிறுவனத்தின் ஆய்வு அறிக்கை பரிசீலனையில் உள்ளது.

**நிதி ஒதுக்கீடு**

**2015—16**ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டத்தின் கீழ் மொத்த திட்ட தொகையாக ரூ.**606.00** இலட்சம், அரசாணை (நிலை) எண்.**21**, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிக்ள் துறை, நாள் **27.02.2016**—ன் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.2.3 வேளாண்மை புள்ளி விவரங்கள் சேகரித்தல்

வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில்களில் பணிபுரியும் பெரும்பான்மையான

மக்களின் வாழ்க்கைத் தரத்தினை நிர்ணயிக்கும் வேளாண்மை தொழில்களின் பங்கு தொடர்ந்து மாநில பொருளாதாரத்தில் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இத்துறையின் முக்கிய செயல்பாடு விவசாயப் புள்ளி விவரங்களை சேகரித்து அதனை பராமரிப்பதாகும். இத்துறையின் வேளாண்மை புள்ளி விவரம், பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி, நிலப்பயன்பாடு, நீர்ப்பாசனம், நில உடைமை, பயிர்க் காப்பீடு, விவசாயக்கூலி மற்றும் விவசாயிகளின் விளைச்சலின் விற்பனை மிகுதி போன்ற அனைத்து விவரங்களையும் உள்ளடக்கியது. இவ்விவரங்கள் விவசாயம் சார்ந்த திட்டங்களின் கொள்கை முடிவுகள் மேற்கொள்ளப் பயன்படுகிறது. இத்துறையில் பின்வரும் பல்வேறு விவசாயம் சார்ந்த திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**1. பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி விவரங்கள் முன் மதிப்பீடு**

ஜமாபந்தியில் பயிர் பரப்பு விவரங்கள் இறுதி செய்யப்படுவதற்கு முன்பாகவும், பயிர் அறுவடை பரிசோதனைகளின் அடிப்படையில் இறுதி உற்பத்தி விகிதம் கணக்கிடப்படும் முன்னர், **56** முக்கிய உணவு மற்றும் உணவல்லாத பயிர்களுக்கான பரப்பு மற்றும் உற்பத்தி விவரங்கள் முன் மதிப்பீடு செய்யப்படுகிறது.

**2. பொது பயிர் மதிப்பீட்டாய்வு திட்டம் (நெல், தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், கரும்பு மற்றும் பருத்தி)**

பொது பயிர் மதிப்பீட்டாய்வு திட்டத்தின் கீழ் (பசலி 1429) **2019–2020** ஆம் ஆண்டு, **17** முதன்மைப் பயிர்களுக்கு **9,500** பரிசோதனைகள் தேர்வு செய்யப்பட்டு, பயிர் அறுவடைப் பரிசோதனைகள் பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையினரால் மேற்பார்வையிடப்பட்டு வருகின்றன. பயிர் அறுவடைப்

பரிசோதனைகளின் அடிப்படையில், உற்பத்தி மற்றும் விளைச்சல் விவரங்கள் மாநில மற்றும் மாவட்ட அளவில் கணிக்கப்பட்டு வருகின்றது.

## 3. பழங்கள், காய்கறிகள் மற்றும் சிறுபான்மைப் பயிர்களுக்கான பயிர் அறுவடைப் பரிசோதனைகள்

பழம், காய்கறி மற்றும் சிறுபான்மைப் பயிர்களுக்கான அறுவடைப் பரிசோதனையின் முக்கிய நோக்கம், பயிர் உற்பத்தி மற்றும் விளைச்சல் விகிதம் (ஒரு ஹெக்டேருக்கு) துல்லியமாக கணக்கிடும் பொருட்டு இத்திட்டம் இத்துறையினால் செயல்படுத்தப் படுகிறது.

- இத்திட்டத்தின் கீழ், முக்கிய தோட்டக்கலை பயிர்களான மா, பலா, வாழை, திராட்சை, கொய்யா, ஆரஞ்சு, எலுமிச்சை மற்றும் அன்னாசி ஆகிய பழவகைப் பயிர்களுக்கும் மற்றும் தக்காளி, வெண்டை, கத்தரி, முட்டைக்கோசு மற்றும் சர்க்கரைவள்ளி ஆகிய காய்கறிப் பயிர்களுக்கும் அறுவடைப் பரிசோதனைகள்

மேற்கொள்ளப் படுகின்றன. **2019–2020** ஆம் ஆண்டில் மொத்தம் **720** கிராமங்களில் **1440** பயிர் அறுவடைப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- சிறுபான்மைப் பயிர் திட்டத்தின் கீழ் மிளகாய், வெங்காயம், மஞ்சள், உருளைக்கிழங்கு, கொத்தமல்லி, மரவள்ளிக்கிழங்கு, முந்திரி மற்றும் இஞ்சி ஆகிய பயிர்கள் அடங்கும். **2019–2020**ஆம் ஆண்டில், மொத்தம் **637** கிராமங்களில் **1,274** பயிர் அறுவடைப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 4. பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் (PMFBY)

**2019–2020** ஆம் ஆண்டு (பசலி **1429**) பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அறிவிக்கைச் செய்யப்பட்ட பயிர்களுக்கு உதவி வேளாண் அலுவலர்களால் பயிர் அறுவடைப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, சராசரி விளைச்சல் விவரங்கள்

கணக்கிடப்பட்டு, வறட்சி, வெள்ளம், புயல், போன்ற இயற்கை சீற்ற பாதிப்புகள் ஏற்படும்போதும், பூச்சி மற்றும் நோயினால் பயிர்களுக்கு சேதம் ஏற்படும்போதும் விவசாயிகளுக்கு காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையினரால் பயிர் அறுவடைப் பரிசோதனைகள் திட்டமிடப்பட்டு மேற்பார்வையிடப்படுகிறது. **2019–2020** ஆம் ஆண்டுக்கு காரிப் பருவத்திற்கு **31** பயிர்களுக்கு **83,076** பரிசோதனைகளும், சிறப்பு பருவத்தில் **4** பயிர்களுக்கு **53,144** பரிசோதனைகளும் மற்றும் ராபி பருவத்தில் **34** பயிர்களுக்கு **1,12,048** பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் அறிவிக்கைச் செய்யப்பட்ட பயிர்களுக்கு விளைச்சல் விவரங்கள் கணிக்கப்பட்டு தொடர்புடைய காப்பீட்டு நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. மேலும் தொடர்புடைய துறையினரால் ஒத்திசைவு செய்யப்பட்டு அறிவிக்கை

செய்யப்பட்ட பயிர் பரப்பு விவரங்கள் ஒவ்வொரு பருவ இறுதியிலும் காப்பீட்டுக் கழகங்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன.

## 5. தென்னை மற்றும் கமுகு பயிர் மதிப்பீட்டாய்வு

ஒரு ஹெக்டேரில் தென்னை மற்றும் கமுகு மரங்களின் எண்ணிக்கை, காய்க்கும் மற்றும் காய்க்காத மரங்களின் எண்ணிக்கை, ஒரு தென்னை மற்றும் கமுகு மரத்தின் சராசரி உற்பத்தி விகிதம், மாநில/மாவட்ட அளவில் ஒரு ஆண்டிற்கான மொத்த உற்பத்தி ஆகியவற்றை மதிப்பீடு செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தென்னை மற்றும் கமுகு பயிரின் ஆய்வுக் காலம் ஜூலை முதல் ஜூன் வரை கொண்ட பசலி ஆண்டு ஆகும். 2019–2020 ஆம் ஆண்டின் ஆய்விற்காக தென்னை பயிருக்கு 380 கிராமங்கள் மற்றும் கமுகு பயிருக்கு 66 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

## 6. மழைப் புள்ளி விவரம் சேகரிப்பு

மழைப் புள்ளி விவரங்களானது சுமார் 627 மழைமானி நிலையங்களிலிருந்து மனித சக்தி / தானியங்கி மழைமானி மூலம் வருவாய்த் துறை, பொதுப்பணித்துறை, வனத்துறை, ஊரக வளர்ச்சித் துறை மற்றும் இந்திய வானியல் ஆய்வுத் துறை போன்ற துறைகளால் மழைப்புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு மாதம், பருவம் மற்றும் ஆண்டு வாரியாக தொகுக்கப்படுகின்றன.

## 7. நீர்ப்பாசனம் மற்றும் நீர்த்தேக்க தரவுகள்

நீர்ப்பாசன தரவுகள் கீழ்கண்ட மூன்று தலைப்புகளில் சேகரிக்கப்படுகிறது. அவை, ஆதார வாரியாக நீர்ப்பாய்ச்சப்பட்ட பரப்பு, பயிர் வாரியாக நீர் பாய்ச்சப்பட்ட பரப்பு மற்றும் தமிழ்நாட்டின் வேளாண்மைக்கு நீர்த்தேக்கங்கள் மூலமாக பாசனத்திற்கு பயன்படும் தரவுகள். இத்தரவுகள்

வருவாய்த் துறை, பொதுப் பணித்துறை, ஊரக வளர்ச்சித் துறை போன்ற துறைகளிலிருந்து பெறப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் வட்ட அளவிலும், மாவட்ட அளவிலும் நீர்ப்பாசனச் சிற்றேடுகள் தயாரிக்கப்படுகின்றன.

## 8. விவசாயக் கூலி

விவசாயக் கூலி விவரங்கள் மாநிலத்தில் உள்ள 385 வட்டாரங்களிலும் ஒரு வட்டராத்திற்கு ஒரு கிராமம் வீதம் தேர்வு செய்யப்பட்டு, அக்கிராமங்களில் விவசாயத் தொழில்களுக்கு வழங்கப்படும் கூலி விவரங்கள் களப் பணியாளர்களால் நேரடியாக சென்று சேகரிக்கப்பட்டு மதிப்பீடு கணிக்கப்படுகின்றன.

## 9. விற்பனை மிகுதித் திட்டம்

விற்பனை மிகுதித் திட்டமானது நெல் உற்பத்தியில் மூன்று பருவங்களுக்கும் (குறுவை, சம்பா மற்றும் கோடை) வழங்கப்பட்ட கூலிக்கான நெல்,

விதைக்க மற்றும் சொந்த நுகர்வுக்கான நெல் போன்றவைகள் தவிர்த்து விற்பனைக்காக ஒதுக்கப்படும் நெல் அளவு மதிப்பீடு செய்யப்படுகின்றன.

## 10. பருவமும் பயிரும் அறிக்கை

மாவட்ட வாரியாக உணவுப் பயிர் மற்றும் உணவல்லாத பயிர்களின் பரப்பு, நில பயன்பாடு, நீர்பாசன ஆதாரங்கள், நீர்பாய்ச்சப்பட்ட மற்றும் நீர்பாய்ச்சப்படாத பயிர்களின் பரப்பு, உற்பத்தி மற்றும், உற்பத்தி விகிதம் ஆகியவற்றினை மதிப்பீடு செய்து ஒவ்வொரு ஆண்டும் வெளியீடு செய்யப்பட்டு மத்திய, மாநில அரசுகள் மற்றும் இதர துறைகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

மேலும், இவ்வறிக்கையில் மழைப் புள்ளி விவரம், வேளாண் சார்ந்த பொருட்களின் விலைவாசி நிலவரம், விவசாயக் கூலி மற்றும் விவசாய பொருளாதார குறியீடு ஆகிய விவரங்களும் அளிக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டின் 2017–18ஆம் ஆண்டிற்கான பருவமும் பயிரும் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. 2018–19ஆம் ஆண்டிற்கான பருவமும் பயிரும் அறிக்கை தயாரிக்கும் பணி முடிவுற்றது.

### 3.2.4 மத்திய நிதி உதவி திட்டங்கள்

பின்வரும் மத்திய அரசு நிதி உதவி பெறும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

➢ **பயிர் பரப்பு விவரங்களை உரிய காலத்தில் மதிப்பிடும் திட்டம் (TRS)**

ஒவ்வொரு ஆண்டும் 20 விழுக்காடு மாதிரி கிராமங்களின் எதேச்சை அடிப்படையில் பயிர் பரப்பின் நில உபயோகப் புள்ளி விவரங்கள் பயிர் பரப்பு உரிய காலத்தில் மதிப்பிடும் திட்டத்தின் கீழ் கணக்கிடப்படுகிறது. 2019–2020ஆம் ஆண்டு 3,476 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, பரப்பு விவரங்கள்

கணிக்கப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- **பயிர் மேம்பாட்டுத் திட்டம் (ICS)**

பயிர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் உதவி வேளாண் அலுவலர்களால் மாநிலத்திற்கு சேகரிக்கப்படும் வேளாண் புள்ளி விவரங்களின் மத்திய மற்றும் மாநில அரசு அலுவலர்களால் முழுமையாக ஆய்வு செய்யப்பட்டு, அதில் காணப்படும் குறைபாடுகளை முறையாகக் களைய தக்க வழிவகைகள் ஏற்படுத்தி புள்ளி விவரங்களின் தரத்தினை உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், அடங்கலில் கிராமத்திற்கான பக்கவாரியான பயிர் பரப்பின் கூட்டுத்தொகை சரியான முறையில் கணிக்கப்படுகிறதா என ஆராய்தலும், பயிர் அறுவடை பரிசோதனைகளை மேற்பார்வை செய்தலும் ஆகும்.

## ➢ வேளாண்மைக் கணக்கெடுப்பு

வேளாண்மைக் கணக்கெடுப்பு ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை **1970–1971** ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டு மூன்று கட்டங்களில் நடத்தப்பட்டு வருகிறது. ஒன்பதாவது வேளாண்மை கணக்கெடுப்பு **2010–2011**ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்டு மூன்று கட்ட அறிக்கைகளும் வெளியிடப்பட்டுள்ளன. **2015–2016**ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்ட பத்தாவது வேளாண்மைக் கணக்கெடுப்பின் மூன்று கட்டப் பணிகளும் நிறைவடைந்துள்ளன. மத்திய அரசின் முதற்கட்ட அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு “பத்தாவது வேளாண்மைக் கணக்கெடுப்பு – தமிழ்நாட்டின் முதற்கட்ட அறிக்கை” வெளியிடப்பட்டுள்ளது. மேலும், இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டப்பணிகளின் அறிக்கைகள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு இறுதி வடிவ அட்டவணைகள்

மத்திய அரசிடம் இருந்து எதிர்நோக்கி உள்ளது. இந்த கணக்கெடுப்பின் முக்கிய காரணிகளான வேளாண் கைப்பற்றுகள், குத்தகைத் தன்மை, நிலக் கைப்பற்றுதாராார்களின் சமூக நிலை, நிலப் பயன்பாடு, நீர்ப்பாசன ஆதாரம், பயிரிடும் வகை, உரம் மற்றும் பூச்சிக்கொல்லி பயன்பாடு மற்றும் வேளாண் கருவிகளின் பயன்பாடு தொடர்பான பயனுள்ள தகவல்களை வழங்குகிறது.

### 3.2.5 மாநில வருவாய் புள்ளி விவரங்கள் மதிப்பீடு

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கான காரணிகளை அளவிடுவதற்கு மாநில வருவாய் கணக்கீடு மிகவும் இன்றியமையாததாகும். மாநில உள்நாட்டு உற்பத்தி மற்றும் பொருளாதார பெருமொத்த காரணிகள் மாநிலத்தின் வளர்ச்சியின் நிலையை கணிக்க அவசியமான ஒன்றாக விளங்குகின்றன. மேலும், அரசுக்கு பொருளாதாரத்தின் பல்வேறு பிரிவுகளில் ஏற்படும் மாற்றங்களை கணிக்கவும் அரசு

நிதி நிலை தேவைகளை கணிக்கவும் இவை பயன்படுகின்றன.

## 1. மாநில வருவாய்

மாநில வருவாய் மதிப்பீடு, பொருளாதார வளர்ச்சியைக் கணிக்க உதவும் வகையில் 17 உட்பிரிவுகளின் கீழ் மொத்த, நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி ஆகியவை மாநில அளவிலும், மாவட்ட வருவாய் மதிப்பீடுகளும் ஒவ்வொரு வருடமும் கணிக்கப்படுகின்றன. மாநில வருவாய் மதிப்பீடுகள் 2011–12ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு தமிழ் நாட்டிற்கு 2016–17ஆம் ஆண்டிற்கு திருத்திய மதிப்பீடும், 2017–18ஆம் ஆண்டிற்கு துரித மதிப்பீடும், 2018–19ஆம் ஆண்டிற்கு முன்மதிப்பீடு மற்றும் 2019–20 முன் மதிப்பீடு தற்காலிகம் ஆகிய மதிப்பீடுகள் நடப்பு மற்றும் நிலையான (2011–12) விலையில் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

## மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடு – தமிழ்நாடு
## (அடிப்படை ஆண்டு 2011–12)

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | ஆண்டு | மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி | | | | நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | நடப்பு விலையில் | வளர்ச்சி விகிதம் (%) | நிலையான (2011–12) விலையில் | வளர்ச்சி விகிதம் (%) | நடப்பு விலையில் | வளர்ச்சி விகிதம் (%) | நிலையான (2011–12) விலையில் | வளர்ச்சி விகிதம் (%) |
| 1 | 2011–12 | 751486 | – | 751486 | – | 674478 | – | 674478 | – |
| 2 | 2012–13 | 854825 | 13.75 | 791824 | 5.37 | 768295 | 13.91 | 709343 | 5.17 |
| 3 | 2013–14 | 968530 | 13.30 | 851976 | 7.60 | 858870 | 11.79 | 750416 | 5.79 |
| 4 | 2014–15 | 1072678 | 10.75 | 893915 | 4.92 | 957350 | 11.47 | 791915 | 5.53 |
| 5 | 2015–16 | 1176500 | 9.68 | 967562 | 8.24 | 1057084 | 10.42 | 862437 | 8.91 |
| 6 | 2016–17 (தி.ம) | 1302639 | 10.72 | 1036762 | 7.15 | 1171973 | 10.87 | 922084 | 6.92 |
| 7 | 2017–18 (து.ம) | 1461841 | 12.22 | 1116334 | 7.68 | 1315577 | 12.25 | 991597 | 7.54 |
| 8 | 2018–19 (மு.ம) | 1664159 | 13.84 | 1207526 | 8.17 | 1499331 | 13.97 | 1074145 | 8.32 |
| 9 | 2019–20 (மு.ம.த) | 1854952 | 11.46 | 1295292 | 7.27 | 1673253 | 11.60 | 1153546 | 7.39 |

தி.ம. – திருத்திய மதிப்பீடு ; து.ம – துரித மதிப்பீடு ; மு.ம.– முன் மதிப்பீடு ; மு.ம.த– முன் மதிப்பீடு (தற்காலிகம்)

## தமிழ் நாட்டின் தனிநபர் வருமானம் (நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி)

**(ரூபாயில்)**

| வ. எண். | ஆண்டு | நடப்பு விலையில் | நிலையான (2011–12) விலையில் |
|---|---|---|---|
| 1 | 2011–12 | 92984 | 92984 |
| 2 | 2012–13 | 104943 | 96890 |
| 3 | 2013–14 | 116236 | 101559 |
| 4 | 2014–15 | 128372 | 106189 |
| 5 | 2015–16 | 140441 | 114581 |
| 6 | 2016–17 (தி.ம) | 154272 | 121378 |
| 7 | 2017–18 (து.ம) | 171583 | 129328 |
| 8 | 2018–19 (மு.ம) | 193750 | 138805 |
| 9 | 2019–20 (மு.ம.த) | 214237 | 147696 |

தி.ம. – திருத்திய மதிப்பீடு ; து.ம. – துரித மதிப்பீடு ; மு.ம.– முன் மதிப்பீடு; மு.ம.த– முன் மதிப்பீடு (தற்காலிகம்)

மாவட்ட வருவாய் மதிப்பீடுகள் **2011–12** ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு **2011–12** இல் இருந்து **2017–18** (தற்காலிகம்) வரை, நடப்பு மற்றும்

நிலையான விலையில் அறிக்கை தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

## 2. மாநிலக் கணக்கு மற்றும் உள்ளாட்சிக் கணக்குகள்

மாநில கணக்கு பிரிவு ஆண்டுதோறும் தமிழ்நாடு மாநில நிதிநிலை அறிக்கை ஆவணங்கள் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களான மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய வரவு–செலவு கணக்குகள், பொருளாதார மற்றும் செயல்நோக்கம் அடிப்படையில் (**Economic cum Purpose Classification**) பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. மேலும் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து உள்ளாட்சி கணக்குகளுக்கும் பொருளாதார பகுப்பாய்வும் செய்யப்படுகிறது. நிதிநிலை அறிக்கை ஆவணங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள் உள்நாட்டு உற்பத்தி

மதிப்பீடு, மூலதன ஆக்கம் கணக்கிடுவதற்கு முக்கிய பங்கு வகிக்கிறது.

பொருளாதார மற்றும் செயல்நோக்கு அடிப்படையில் **2017–18** (கணக்குகள்) **2018–19** (திருத்த மதிப்பீடு), **2019–20** (திட்ட மதிப்பீடு) ஆகிய ஆண்டுகளுக்கு தமிழ்நாடு மாநில நிதிநிலை அறிக்கை இறுதி செய்யப்பட்டுள்ளது. மாநில உள்ளாட்சி நிறுவனங்களான மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய வரவு–செலவு கணக்குகள் **2018–19** ஆம் ஆண்டிற்கு பொருளாதார மற்றும் செயல்நோக்கம் அடிப்படையில் பகுப்பாய்வு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 3. மூலதன ஆக்கம்

மத்திய புள்ளியியல் அலுவலகம் வழிகாட்டுதலின் படி மாநில பொதுத்துறை மற்றும் தனியார் துறைக்கான மொத்த நிலையான மூலதன ஆக்கம் கணக்கிடப்படுகின்றன. இவற்றின் மூலம்

ஒவ்வொரு பொதுத்துறை மற்றும் தனியார் துறையின் பொருளாதார வளர்ச்சி கணக்கிடப்படுகிறது. இம்மதிப்பீடுகள் அரசிற்கு சரியான கொள்கை முடிவு எடுப்பதற்கும் நாட்டின் பொருளாதார திட்டமிடுதலுக்கும் பயன்படுகின்றன.

**2011–12** ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு, **2017–18** ஆம் ஆண்டிற்கான மாநிலத்தின் பொதுத்துறைகளுக்கான மொத்த மூலதன ஆக்கம் மதிப்பீடுகள் தயாரிக்கும் பணி நடைபெற்றுவருகிறது.

## 3.2.6 விலைவாசி மற்றும் விலைவாசி குறியீட்டெண்

➢ **அங்காடி புலனாய்வு மற்றும் விலை புள்ளி விவரம்:**

மாநிலத்தில் உள்ள **96** அங்காடி புலனாய்வு மையங்கள் மூலம் முக்கிய வேளாண்மை மற்றும் வேளாண் சார்பற்ற பொருட்களின் விலைகள், முதன்மை வேளாண்மை பொருட்களின் வரத்து, இருப்பு மற்றும் அனுப்புகை ஆகிய விவரங்கள்

சேகரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் வாரந்தோறும் / மாதந்தோறும் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு பாரத ரிசர்வ் வங்கி, மத்திய தொழிலாளர் செயலகம், வேளாண்மைத் துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, தேங்காய் மேம்பாட்டு வாரியம், இந்திய உணவுக் கழகம் ஆகியவற்றிற்கு அனுப்பப்பட்டு வருகிறது. மேலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சிறைத்துறை, அரசு பொது மருத்துவமனைகள் மற்றும் பிற அயற்துறைகளிடமிருந்து விலை விவரங்கள் கோரப்படும்போது அவ்விவரங்கள் அளிக்கப்பட்டு வருகிறது.

அரசின் கொள்கை முடிவு மற்றும் குறியீட்டெண்கள் கணிப்பதற்கு விலை விவரங்கள் பயன்படுகிறது.

## ➢ மொத்த விலை குறியீட்டெண்

வேளாண்மை மற்றும் வேளாண்மை தொழில் சாராத பொருட்களுக்கான மொத்த விலை விவரங்கள் அனைத்து மாவட்டங்களிலிருந்து சேகரிக்கப்பட்டு தமிழ்நாட்டிற்கான மொத்த விலைக்குறியீட்டெண் **2011–2012=100–ஐ** அடிப்படை ஆண்டாகக் கொண்டு மாதந்தோறும் கணித்து அரசுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

## ➢ தொழிலாளர்களுக்கான நுகர்வோர் விலைக் குறியீட்டெண்

தமிழ்நாட்டில் உள்ள சென்னை, திருச்சி, மதுரை, குன்னூர், கோயமுத்தூர் மற்றும் சேலம் ஆகிய ஆறு மத்திய மையங்களுக்கான நுகர்வோர் விலை குறியீட்டெண்கள் சிம்லாவில் உள்ள மத்திய தொழிலாளர் செயலகத்தால் **2001 = 100** ஐ அடிப்படை ஆண்டாக கொண்டு கணித்து வெளியிடப்படுகிறது. அதற்கான விலை விவரங்கள் அந்தந்த

மையங்களிலிருந்து சேகரித்து நேரடியாக சிம்லாவிற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. கடலூர், நாகர்கோயில், வேலூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய நான்கு மாநில மையங்களுக்கு 2011 = 100 ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்டு நுகர்வோர் விலைக் குறியீட்டெண்கள் மாதந்தோறும் கணித்து வெளியிடப்படுகிறது. நுகர்வோர் விலை குறியீட்டெண்களைக் கொண்டு அகவிலைப்படி, தினக்கூலி, மற்றும் குறைந்தபட்ச கூலி ஆகியவை கணக்கிடப்படுகின்றன.

- **மாவட்ட அளவிலான நுகர்வோர் விலை குறியீட்டெண்கள் (கிராமப்புறம், நகர்ப்புறம், இணைந்தது)**

மாவட்ட அளவிலான கிராமப்புற மற்றும் நகர்ப்புற நுகர்வோர் விலைக் குறியீட்டெண்கள் திட்டங்களை பரவலாக்குவதற்கும், மாவட்ட அளவிலான விலை நிலவரப் போக்கினை அறிந்து கொள்வதற்கும், குறிப்பிட்ட மண்டலம் அல்லது மாவட்டத்திற்குரிய

கொள்கைகளை வகுப்பதற்கான இலக்குகளை நிர்ணயிப்பதற்கும் பயன்படுகிறது.

மத்திய புள்ளி இயல் அலுவலகத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி **2019–2020–ஐ** அடிப்படை ஆண்டாகக் கொண்டு மாவட்ட அளவிலான நுகர்வோர் விலைக் குறியீட்டெண்கள் கணிக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. நுகர்வோர் விலைக் குறிட்டெண்கள் கணிப்பதற்கு தமிழ்நாட்டின் மாவட்டங்களில் உள்ள **153** கிராமப்புற மையங்கள் மற்றும் **145** நகர்ப்புற மையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. பொருட்களின் தொகுப்பு இறுதி செய்யப்பட்டு அடிப்படை ஆண்டு விலை விவரங்கள் சேகரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

### 3.2.7 சமூகப் புள்ளி இயல்

சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்களை அறியவும் அதனை புரிந்து கொள்ளவும் சமூகப் புள்ளி இயல் விவர பகுப்பாய்வுகள் அடிப்படை கருவியாக

விளங்குகின்றது. தனி மனித நிலை குறித்தும் சமூகத்தின் சூழ்நிலை குறித்தும் தனி மனிதனின் பொருளாதார நடத்தையின் மூலமும் சமூக சூழ்நிலையில் இருந்தும் அறிய முடிகிறது. சமூகப் புள்ளி இயல் ஆய்வு குறிப்பாக குழந்தைகள், முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் உட்பட அனைத்து பிரிவுகளின் விவரங்களும் சிறப்பாக ஆய்வு செய்யப்படுகிறது. மேலும், வீட்டு வசதி, சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு போன்ற விவரங்களும் இவ்வாய்வின் மூலம் கணக்கிடப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் பின்வரும் திட்டங்களான தேசிய மாதிரி ஆய்வு, ஆண்டுத் தொழில் ஆய்வு, தொழில் உற்பத்தி குறியீடு, வீட்டுவசதி, கட்டட புள்ளி விவரங்கள், கைத்தறி மற்றும் தமிழ்நாடு புள்ளி இயல் கையேடு ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

- **தேசிய மாதிரி ஆய்வு**

தேசிய மாதிரி ஆய்வு என்பது இந்தியாவின் தேசிய மாதிரி ஆய்வு அமைப்பு, தொழில் நுட்ப வழிகாட்டுதலுடன் தொடர்ச்சியான சுற்றுகளில் நடத்தப்படும் மாநில அளவிலான, பெரிய அளவிலான பல தலைப்பிலான ஆய்வு ஆகும். இந்த ஆய்வு, வெவ்வேறு துறைகளைப் பற்றிய கணக்கெடுப்பில் சேகரிக்கப்பட்ட மாதிரி தரவுகளின் அடிப்படையில் மதிப்பீடுகளை அளிக்கிறது.

- 75வது சுற்று தேசிய மாதிரி ஆய்வு (ஜூலை 2017 முதல் ஜூன் 2018) "வீட்டு நுகர்வோர் செலவினம், கல்வி பற்றிய உடல்நலம் மற்றும் வீட்டு சமூக நுகர்விற்கான வீட்டு வசதி சமூக நுகர்வு" பற்றிய கணக்கெடுப்புக்கு ஒதுக்கப்பட்டது.
- 76வது சுற்று தேசிய மாதிரி ஆய்வு (ஜூலை 2018 முதல் டிசம்பர் 2018 வரை), "குடிநீர்,

சுகாதாரம் மற்றும் வீட்டு வசதி நிலை மற்றும் மாற்றுத் திறனாளிகள் குறித்த ஆய்வு'' ஆகியவற்றின் மீதான கணக்கெடுப்புக்கு ஒதுக்கப்பட்டது.

- தேசிய மாதிரி ஆய்வு 77வது சுற்றில் (ஜனவரி 2019–டிசம்பர் 2019) ''நிலம் மற்றும் கால்நடை இருப்பு, விவசாயக் குடியிருப்புகளின் தற்போதைய நிலை மற்றும் கடன் மற்றும் முதலீடு'' ஆகியவற்றைப் பற்றிய கணக்கெடுப்புக்கான களப்பணி முடிவடைந்துள்ளது.
- தற்பொழுது தேசிய மாதிரி ஆய்வு 78வது சுற்றில் (ஜனவரி 2020–டிசம்பர் 2020) ''உள்நாட்டு சுற்றுலா மற்றும் பல்நோக்கு குறியீட்டு கணக்கெடுப்பு'' ஆகியவற்றைப் பற்றிய கணக்கெடுப்பு துவங்கியுள்ளது.

➢ **வீட்டு வசதி மற்றும் கட்டிடப் புள்ளி இயல்.**

தேசிய அளவில் வீட்டு வசதி கொள்கை மற்றும் வீட்டு வசதி திட்ட ஆவணங்களை ஏற்படுத்துவதற்காக பொது மற்றும் தனியார் துறைகளின் கட்டிடம் சம்பந்தமான செயல்பாடுகள் குறித்த விவரங்கள் சேகரிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், கட்டுமானத்தின் தன்மை மற்றும் வகை, அஸ்திவாரம், தரைபரப்பு பகுதி, வசிக்கும் அலகுகள், குடியிருப்பு மற்றும் குடியிருப்பல்லாத அலகுகள் எண்ணிக்கை, மதிப்பீடு செலவு போன்ற விவரங்கள் சேகரிக்கப்படுகிறது.

**2019–2020**–ல் பொதுத்துறை திட்டப் பட்டியல் மற்றும் படிவம்–**1** – பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து விவரங்கள், தனியார் துறை படிவம்–**2** – **151** நகரங்களிலிருந்து விவரங்கள் சேகரிக்கப்பட்டன.

## ➢ வீடு கட்டத் தொடங்குதலுக்கான குறியீடு

மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்ட அமைச்சகத்தின் கீழ் உள்ள, தேசிய கட்டட அமைப்பு மூலம் வீடு கட்டத் தொடங்குதலுக்கான குறியீடு எனும் திட்டம் 2014–15ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இக்குறியீடு பல்வேறுபட்ட துறைகளின் வளர்ச்சியைக் கண்டறிய முக்கிய காரணியாக உள்ளது. மேலும், வீடு கட்ட தொடங்கும் குறியீட்டு கணக்கீடானது வீட்டு வசதி திட்டத்தில் நிகழும் மாற்றங்களையும் மற்றும் அதைச் சார்ந்த துறைகளின் வளர்ச்சியைக் கண்டறிவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்திற்காக தமிழகத்தின் தேர்வு செய்யப்பட்ட 17 மையங்களில் உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்து பெறப்படுகின்ற புள்ளி விவரங்கள் தேசிய கட்டடவியல் கழக இணைவு வாசல் (NBO- Portal) மூலம் இத்துறையினால் பதிவு செய்யப்படுகிறது.

## ➢ கட்டிடக் குறியீட்டெண்

கட்டுமானப் பொருட்கள் மற்றும் கட்டுமானப் பணியாளர்களின் கூலி விவரங்கள் காலாண்டிற்கு ஒருமுறை 16 மாவட்ட மையங்களில் இருந்து (சென்னை,காஞ்சிபுரம்,கடலூர், வேலூர், சேலம், தர்மபுரி, கோயம்புத்துார், ஈரோடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, புதுக்கோட்டை, விருதுநகர், பாளையங்கோட்டை, நாகர்கோவில், மற்றும் உதகமண்டலம்) சேகரிக்கப்படுகின்றன. அடிப்படை ஆண்டு 1999–2000 = 100 அடிப்படையில் கட்டிடக் குறியீட்டெண் கணிக்கப்பட்டு மத்திய மற்றும் மாநில அரசு அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

கட்டுமானப் பொருட்கள் மற்றும் கட்டுமானப் பணியாளர்களின் கூலி விவரங்கள் காலாண்டிற்கு ஒருமுறை 16 மாவட்ட மையங்களில் இருந்து சேகரிக்கப்பட்டு வருகிறது.

**31.03.2019** – உடன் முடிவடைந்த காலாண்டிற்கு **16** மையங்களுக்கான கட்டிட செலவு குறியீட்டெண் தொகுப்புப்பணி நடைபெற்று வருகிறது.

## 3.2.8 தொழிற் புள்ளி விவரங்கள்

- **ஆண்டுத் தொழில் ஆய்வு**

மாநில வருவாய் மதிப்பீட்டிற்கென தொழிற்சாலை சட்டம் **1948** பிரிவு **2m(i)** மற்றும் **2m(ii)**ன் கீழ் மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றிற்கான முதலீடு, கடன், உற்பத்தி மற்றும் கூடுதல் பெறுமானம், தொழிலாளர்கள், சம்பளம், இடுபொருள் ஆகியவை குறித்த தொழிற்சாலை விவரங்கள் சேகரிக்கப்பட்டு அதன் மூலம் தமிழ்நாடு ஆண்டு தொழில் ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த தகவல்கள் உற்பத்தி துறையிலிருந்து வருமான மதிப்பீட்டினை கணக்கீடு, மாநில

வருவாய் மதிப்பீட்டினை கணக்கிடுவதற்கு பயன்படுத்தப்படுகிறது.

தற்போது ஆண்டுத் தொழில் ஆய்வு 2016–17–ம் ஆண்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும் 2017–18–ம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகளில் ஆய்வு மூலம் மேற்கண்ட விவரங்கள் சேகரிக்கப்பட்டு கூர்ந்தாய்வு செய்யும் பணி நடைபெறுகிறது.

- **தொழில் உற்பத்தி குறியீட்டெண்**

தொழில் உற்பத்தி குறியீட்டெண், மாநில அளவில் உள்ள தொழிற்சாலைகளின் உற்பத்தி விவரங்கள் மற்றும் பொருளாதார நிலைமையினை மதிப்பிட உதவுகிறது. ஒவ்வொரு மாதமும் கனிமம் (8 வகைகள்), தொழிற்சாலை (144 வகைகள்), மின்சாரம் (1 வகை) ஆகிய துறைகளிலிருந்து அடிப்படை ஆண்டு 2011–12ற்கு உற்பத்தி விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது.

மாதாந்திர அறிக்கை, மூன்று துறைகளிலிருந்து பெறப்படுகின்ற உற்பத்தி விவரங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுகிறது. கனிம உற்பத்தி விவரங்கள், கனிமம் மற்றும் சுரங்கத் துறை, அலுவலகத்திலிருந்தும், மின்சார உற்பத்தி, மத்திய மின் வாரியம், புது டில்லியிலிருந்தும், தொழிற்துறை உற்பத்தி விவரங்கள் 1244 தொழிற்சாலைகளிடமிருந்து நேரடியாக உரிய படிவங்களில் பெறப்பட்டு 253 வகைகளுக்கும் விவரங்கள் சேகரிக்கப்படுகிறன்றன. இந்த உற்பத்தி விவரங்களை அடிப்படையாக கொண்டு, துறை வாரியான மற்றும் பயன்பாடு வாரியான குறியீட்டெண்கள் ஒவ்வொரு மாதமும் கணிக்கப்படுகின்றன.

ஜீலை 2019 வரையிலான திருத்திய அறிக்கை மற்றும் ஆகஸ்டு, செப்டம்பர் 2019 வரையிலான தற்காலிக அறிக்கை (அடிப்படை ஆண்டு 2011–12)

வெளியிடப்பட்டுள்ளது. ஆகஸ்டு, செப்டம்பர் 2019 மாதத்திற்கான திருத்திய அறிக்கை மற்றும் அக்டோபர், நவம்பர் 2019 மாதத்திற்கான தற்காலிக அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

- **கைத்தறி திட்டம்**

கைத்தறி துணிகளின் உற்பத்தி, விற்பனை, இருப்பு குறித்த காலாண்டு விவரம் மற்றும் நெசவாளர்களின் பொருளாதார நிலை குறித்த விவரங்கள் தொகுத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

சென்னை, கிருஷ்ணகிரி, நீலகிரி மற்றும் பெரம்பலூர் மாவட்டங்கள் தவிர இதர மாவட்டங்களில் 164 தேர்வு செய்யப்பட்ட குவி மையங்களிலிருந்து கைத்தறி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 3.2.9 ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு

பொருளாதார கணக்கெடுப்பு என்பது வேளாண் மற்றும் வேளாண்மை அல்லாத நிறுவனங்கள் (பயிர் உற்பத்தி, மலைதோட்டப்பயிர், பொது நிர்வாகம், இராணுவம், கட்டாய சமூகப்பாதுகாப்பு ஆகியவை தவிர) உற்பத்தி சார்ந்த அல்லது சேவைகளுடன் தொடர்புடைய அனைத்து பொருளாதார நடவடிக்கைகளையும் கணக்கிடுதல் ஆகும்.

பொருளாதாரக் கணக்கெடுப்பு மாநிலத்தின் புவியியல் எல்லைக்குள் அமைந்திருக்கும் அமைப்புசாரா நிறுவனங்கள் உட்பட அனைத்து நிறுவனங்களின் எண்ணிக்கையினை வழங்குகிறது. பொருளாதாரக் கணக்கெடுப்பானது பொருளாதாரத்தின் பல்வேறு பிரிவுகளில் வளர்ச்சித் திட்டங்களை திட்டமிடுவதற்கு மற்றும் செயல்படுத்துவதற்கு தேவைப்படும், தொழில் முனைவோர் குறித்த தரவு, நிறுவனங்கள் குறிப்பாக

அமைப்புசாரா நிறுவனங்களின் எண்ணிக்கை, வேலைவாய்ப்பு நிலை போன்ற பல்வேறு அடிப்படை விவரங்களை வழங்குவதாகும்.

பொருளாதாரக் கணக்கெடுப்பு மாநிலத்தின் அனைத்து நிறுவனங்களின் செயல்பாடு மற்றும் கட்டமைப்பு மாறிகள் பற்றிய தகவல்களை வழங்குகிறது. மேலும் பொருளாதார நடவடிக்கைகளின் புவியியல் பரவல், நிறுவனங்களின் உரிமையாளர் வகை, பணியாளர்களின் எண்ணிக்கை போன்ற தகவல்களை வழங்குகிறது, பொருளாதாரக் கணக்கெடுப்பில் சேகரிக்கப்படும் விவரங்கள் மாநில மற்றும் மாவட்ட அளவில் சமூக பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை திட்டமிடுவதற்கு மிகவும் பயன்படுகிறது.

ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை பொருளாதார கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. இதுவரை 6 பொருளாதார கணக்கெடுப்புகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. மத்திய அரசால் இதுவரை

நடத்தப்பட்டுள்ள அனைத்து பொருளாதார கணக்கெடுப்புகளிலும் தமிழ்நாடு பங்குபெற்று உள்ளது. தற்போது நடைபெறுவது ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு ஆகும்.

இந்திய அரசின் புள்ளிஇயல் மற்றும் திட்ட செயலாக்க அமைச்சகத்தினால் ஏழாவது பொருளாதார கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. மாநில அளவில் ஏழாவது பொருளாதார கணக்கெடுப்பில் தொடர்புடைய மாநில துறைகளை ஒருங்கினைக்கும் துறையாக பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் செயல்படுகிறது. பொதுப்பணி மையம் மற்றும் இந்திய மின்ஆளுமை மையமும் ஏழாவது பொருளாதார கணக்கெடுப்பை நிறைவேற்றும் நிறுவனமாக செயல்படுகிறது.

ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்புப் பணியில் மேம்படுத்தப்பட்ட தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில் நுட்ப கருவிகள் பயன்படுத்தப்படுகிறது. ஏழாவது பொருளாதாரக்

கணக்கெடுப்பு தொழில் நுட்ப பணிகள் இந்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்ப அமைச்சகத்தின் கீழ் உருவாக்கப்பட்ட பொது சேவை மையம், இந்திய மின்ஆளுமை சேவை மையம் – SPV என்ற நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது. (இந்திய அரசின் அரசிதழ் எண் 1749, நாள் 13.06.2019–இன்படி).

கணக்கெடுப்பு பணி மற்றும் முதல் நிலை மேற்பார்வை பணி (100% மேற்பார்வை) பொது சேவை மையம், இந்திய மின் ஆளுமை சேவை மையம் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது. ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு பணியில் 10% மேற்பார்வைப்பணி, இரண்டாம் நிலை மேற்பார்வையாளர்களால் மேற்பார்வையிடப்படுகிறது. இரண்டாம் நிலை மேற்பார்வை பணியில் தேசிய மாதிரி ஆய்வு அலுவலக அலுவலர்கள், மாநில பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை மற்றும் மாவட்ட தொழில் மைய அலுவலர்கள் பங்கேற்றுள்ளனர்.

ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு பணி தமிழ்நாட்டில் சுமுகமாக நடைபெற அரசாணை **எண்.80,** திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள்(தவ) துறை, நாள்: **03.06.2019–**இன் படி பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை, மாநில ஒருங்கிணைப்புக் குழு (SLCC), மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு (DLCC) – (சென்னை நீங்கலாக) மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஒருங்கிணைப்புக் குழு.

தமிழ்நாட்டில் ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு **–2019** களப்பணி மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களால் **09.10.2019** அன்று சென்னையில் துவக்கி வைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து அனைத்து மாவட்டங்களிலும் ஏழாவது பொருளாதார கணக்கெடுப்பு அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்களால் துவக்கி வைக்கப்பட்டு, களப்பணி மற்றும்

மேற்பார்வைப்பணி அனைத்து மாவட்டங்களிலும் தற்போது நடைபெற்று வருகிறது.

### 3.2.10 வெளியீடுகள்

இத்துறையிலிருந்து மாநில, மாவட்ட, வட்டார அளவில் ஏறத்தாழ **500** அறிக்கைகள் பருவ வாரியாக வெளியாகின்றன. அவைகளில் தமிழ்நாடு புள்ளி இயல் கையேடு, ஆண்டு புள்ளிஇயல் தொகுப்பு, பருவமும் பயிரும் பற்றிய அறிக்கை, மாவட்டப் புள்ளிஇயல் கையேடு போன்ற முக்கிய வெளியீடுகள் ஆகும்.

### 3.2.11 புள்ளி இயல் வலுப்படுத்தும் ஆதரவுத் திட்டம் (SSS)

இந்திய புள்ளிஇயல் அமைப்பினை வலுப்படுத்தும் திட்டம் (ISSP) புள்ளி இயல் வலுப்படுத்தும் ஆதரவுத் திட்டம் (SSS) என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசினால்

செயல்படுத்தப்படும் திட்டமானது பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் செயல்பாடுகளை மாநில அளவில் ஒருங்கிணைக்க மனிதவள மேம்பாட்டிற்கும் மாநில பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், தமிழக அரசு மத்திய அரசுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ரூ.40.76 கோடி மதிப்பீட்டிற்கு 28.09.2011–ல் ஏற்படுத்தியது. எனினும், மத்திய அரசு திருத்திய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ரூ.40.76 கோடியிலிருந்து ரூ.24.15 கோடிக்கு (ரூ.19.31 கோடி மத்திய அரசின் பங்கு மற்றும் ரூ.4.84 கோடி மாநில அரசின் பங்கு) இத்திட்டத்தை செயல்படுத்த மாற்றி அமைத்தது. இந்த திருத்திய புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழக அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதன்படி, ரூ.19.31 கோடி மத்திய அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது. மாநில அரசு கட்டாயம் அளிக்க வேண்டிய தொகையான ரூ.4.84 கோடியுடன் மேலும் அதிகமாக ரூ.14.52 கோடியினை கட்டுமான பணிக்கு வழங்கியுள்ளது.

இத்திருத்திய புரிந்துணர்வு ஒப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயல்பாடுகள் மேற்படி நிதியை பயன்படுத்தி செயல்படுத்தப்பட்டுள்ளது. துறையில் செயல்படுத்தப்படும் தரவுகள் சேகரிக்கும் பொதுவான மென்பொருள் ஆய்வு பயன்பாட்டு தயாரித்தல், தகவல் பரிமாற்றத்திற்காக **645** சிம் கார்டுகள் பி.எஸ்.என்.எல். நிறுவனம் மூலம் வாங்குதல், ஆற்காடு மற்றும் இராசிபுரம் வட்டாரப் புள்ளி இயல் ஆய்வாளர்களின் அலுவலக கட்டிடங்கள் மற்றும் மண்டல மற்றும் மாவட்ட அலுவலகங்களில் கட்டுமான பணிகள் மேற்கொள்ளுதல், பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் மற்றும் அதனை சார்ந்த துறைகளின் பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல் கணிணி வன்பொருள் மேம்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

**3.2.12 தமிழ்நாடு மாநில புள்ளிஇயல் பயிற்சி நிறுவனம்**

இத்துறையின் பணியாளர்களின் திறனை மேம்படுத்துவதற்காக பயிற்சி அளிக்க வேண்டி தமிழ்நாடு மாநில புள்ளி இயல் பயிற்சி நிறுவனம் நிறுவப்பட்டு தற்பொழுது அரசால் ஒப்பளிக்கப்பட்ட பதவிகளில் இயக்குநர் மற்றும் இதர பணியாளர்களைக் கொண்டு **01.05.2012** முதல் பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை தலைமையிட வளாகத்தில் இப்பயிற்சி நிறுவனம் இயங்கி கொண்டு வருகின்றது. இந்நிறுவனத்தில் நடப்பு **2019–20** நிதியாண்டில், **585** பணியாளர்களுக்கு **25** தொகுகளில் தகவல்நுட்பக் கருவிகள், பொருளாதார மற்றும் புள்ளிவிவர அமைப்புகளில் அடிப்படைக் கோட்பாடுகள், தொழில் நுட்பம், அடிப்படை மற்றும் மேம்பட்ட பயிற்சி, தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மாநில புள்ளி இயல் பயிற்சி நிறுவனம், இத்துறையில் புதியதாக பணியில் அமர்த்தப்பட்டுள்ள

புள்ளிஇயல் உதவி ஆய்வாளர் மற்றும் புள்ளிஇயல் உதவி இயக்குநர் ஆகிய பணியாளர்களுக்கு பொருளாதார மற்றும் புள்ளிவிவர அமைப்புகளில் அடிப்படைக் கோட்பாடுகள், தொழில் நுட்பம், தரவு பகுப்பாய்வு, அடிப்படை மற்றும் மேம்பட்ட பயிற்சி, அறிக்கை எழுதுதல் போன்றவைகளை உள்ளடக்கிய அறிமுக பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

தேவை அடிப்படையிலான குறுகிய கால பயிற்சிகள் முறையே, வேளாண்மை மற்றும் தொழில்புள்ளி விவரம், மாநில வருவாய் மதிப்பீட்டு முறைகள், சமூகப் பொருளாதார கணக்கெடுப்பு புள்ளிஇயல் தொகுப்புகளின் பயன்பாடுகள், மென்பொருள் உருவாக்குதல், தகவல் விவரங்களை பாதுகாத்தல் மற்றும் கணினி மேலாண்மை ஆகியவை அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றன.

## 3.2.13 நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals)

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் அடைவதற்கு சிறப்பு தரவு சேகரிப்பு குழு இத்துறை அலுவலர்களை கொண்டு தரவுகளை சேகரிக்கவும் அப்பணி மேற்பார்வையிடவும் ஒரு குழுமம் அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு இத்துறையின் கூடுதல் இயக்குநர் பொறுப்பு அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

தரவு சேகரிப்பு குழுமத்தின் முக்கிய பணி நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளின் காரணிகள் தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து தரவுகளை சேகரிப்பதாகும். இத்துறை நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் தொடர்பான மாநில தரவு மையமாகவும், நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கான காரணிகளை கண்காணிக்கும் பணியினை செய்கின்றது.

மேலும், இந்தத் துறை , தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலம் (TNeGA) உருவாக்கப்பட்ட நீடித்த நிலையான வளர்ச்சி குறிக்கோள்களுக்கான கண்காணிப்பு பலகை குழுவில் அங்கம் வகிக்கிறது. இந்த கண்காணிப்பு பலகையினை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் **07.11.2019** அன்று தொடங்கி வைத்தார்.

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் கண்காணிப்பு பலகையில் கொடுக்கப்பட்ட இலக்குகள் மற்றும் அதன் காரணிகள் மற்றும் தரவு மதிப்பு , அலகு மற்றும் போக்குகளுக்கான தகவலை அளிக்கின்றது. நீடித்த நிலையான வளர்சசி இலக்குகள் கண்காணிப்பு பலகையானது அரசாங்கத்திற்கும், முடிவெடுப்பவர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும், கல்வியாளர்கள் மற்றும் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளின் கண்காணிப்பில் ஆர்வம் உள்ளவர்களுக்கும் காட்சிப்படுத்துதல் மற்றும் தரவை

ஆராயும் கருவிகள் மூலம் தரவுகளை எளிதாக பகுப்பாய்வு செய்ய பயன்படுகிறது.

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை கண்காணிப்பு பலகையின் மூலம் சம்பந்தப்பட்ட பயனாளர்கள் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளின் முன்னேற்றத்தை சம்பந்தப்பட்ட துறைகள் வாரியாகவும், மாவட்ட வாரியாகவும் கண்காணிக்க பயன்படுத்தலாம். ஒரு குறிப்பிட்ட இலக்கு அல்லது குறிக்கோளை ஆராய கண்காணிப்பு பலகையில் உள்ள தரவுகளை கருப்பொருள் வரைபடங்கள், மற்றும் அட்டவணைகள் மூலம் பயனாளர்களுக்கு காட்சிப்படுத்த முடிகிறது. பயனாளர்கள் இலக்குகளின் போக்குகளின் விவரங்களை விரல் நுனியில் உடனுக்குடன் அறிந்துகொள்ளலாம். கண்காணிப்பு பலகை நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை அதிகளவு காட்சிப்படுத்தவும் பயனுள்ள உள்ளடக்கம் கொண்ட

அதிக தகவலை அளிக்கவும் அவ்வப்போது மேம்படுத்தப்படுகிறது.

ஆரம்ப தரவு பதிவுப் பணிகள் இத்துறையின் மூலம் செய்யப்பட்டது. தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மற்றும் மாநில திட்டக்குழு உதவியுடன் இத்துறை காரணிகள் தொடர்புடைய துறைகளுக்கு உள்நுழைவு சான்றுகள் உருவாக்கியுள்ளது. மேலும் அத்துறை அலுவலர்களுக்கு தங்களுடைய தரவுகளை கண்காணிப்பு பலகையில் நேரடியாக தகவல் பதிவு செய்வதற்கான பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. தரவுகளை பதிவு செய்தல், தொடர்புடைய துறைகளின் அடிப்படை பொறுப்பாகும். தொடர்புடைய துறைகளின் ஒருங்கிணைப்பு பணியினை இத்துறை செய்கின்றது. துறைகள் தங்கள் தரவுகளை பகிர்தல், நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் இந்திய குறியீட்டிற்கு மத்திய அரசால் பயன்படுத்தப்பட்ட ஆய்வு தரவு, தரவுகளின் கால இடைவெளி, சில காரணிகளுக்கு தரவு இல்லாமை ஆகியவை நீடித்த நிலையான

வளர்ச்சி இலக்குகளுக்கான தரவுகளை சேகரிப்பதற்கான சில சவால்கள் என்பதால் அவற்றை கவனிக்க வேண்டியுள்ளது.

நவம்பர் 2019ல் நடைபெற்ற மத்திய மற்றும் மாநில புள்ளி இயல் அமைப்புகளின் மாநாட்டிற்குப் பின்பு மாநில குறியீடு கட்டமைப்பு மாற்றியமைத்து, அதனை இறுதி செய்ய இலக்குகள் தொடர்புடைய துறைகளுடன் கூட்டம் நடத்தப்பட்டது. மாவட்டம் மற்றும் வட்டார அளவிலான குறியீடு கட்டமைப்பு தன்மையை இறுதி செய்வதற்காக மாவட்டம் மற்றும் வட்டார அளவிலான காரணிகளுக்கு தரவுகள் கிடைக்கும் தன்மை குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

## 3.2.14 பாலின வரவு செலவு (Gender Budget)

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் என்பது அனைவருக்கும் சிறந்த மற்றும் நிலையான எதிர்காலத்தை அடைவதற்கான வரைபடமாகும்.

நீடித்த நிலையான வளர்ச்சிகள் வறுமை, சமத்துவமின்மை, காலநிலை, சுற்றுச்சூழல் சீரழிவு, செழிப்பு, அமைதி மற்றும் நீதி உள்ளிட்ட உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதாகும். பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு சரிநிகர் கல்வி, சுகாதார பராமரிப்பு, கண்ணியமான வேலை, அரசியல் மற்றும் பொருளாதார முடிவுகளில் பிரதிநிதித்துவம் வழங்குவது நாட்டின் பொருளாதாரத்தை வளர்ப்பதற்கும் மனித குல முன்னேற்றத்திற்கும் பெரிதும் பயன் அளிக்கும்.

"பாலின சமத்துவத்தை அடைதல் மற்றும் அனைத்து பெண்கள் அதிகாரம் பெறுதல்" என்பது நிலையான வளர்ச்சி குறிக்கோள்களின் 5வது குறிக்கோள் ஆகும்.

பெண்கள் நலன் சார்ந்த திட்டங்களின் கொள்கைகள் மற்றும் திட்டங்களை வடிவமைப்பதில் தமிழகம் ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. தமிழ்நாடு நிதித்துறையில் பாலின பட்ஜெட் குழுவை

உருவாக்கி, 2017–18 ஆம் ஆண்டில் மாநில பட்ஜெட்டில் பாலின பட்ஜெட் அறிக்கையை சேர்த்துள்ளது.

நீடித்த நிலையான வளர்ச்சியின் ஒரு பகுதியாக பாலின பட்ஜெட் குறித்த ஒரு சிற்றேட்டைத் தயாரிக்க, தமிழ்நாட்டில் பெண்களை மையமாகக் கொண்ட திட்டங்களையும், அவர்களின் பட்ஜெட் ஒதுக்கீடு மற்றும் அதற்கான செலவுகள் குறித்த புள்ளிவிவர அறிக்கைகளை பகுப்பாய்வு செய்ய இத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

பாலின வரவு செலவுத் திட்டம் என்பது பெண்களுக்கு தனி வரவு செலவுத் திட்டங்களை உருவாக்குவது அல்ல, அல்லது பெண்களின் திட்டங்களுக்கான செலவினங்களை மட்டும் அதிகரிப்பது அல்ல ஆனால் பாலின பிரச்சினைகள் குறித்த திட்டங்களை பகுப்பாய்வு செய்வது மற்றும் அனைத்து நிலைகளிலும் திருத்த மற்றும் ஆதரவு நடவடிக்கைகளுக்கு முயற்சிப்பது என்பதையே கவனத்தில் கொள்ள வேண்டும்.

பாலின வரவு செலவுத் திட்டம் வரவு செலவுத் திட்டங்களைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் முன்முயற்சிகளை உள்ளடக்கியது அல்லது பாலின கண்ணோட்டத்தில் கொள்கைகள் மற்றும் வரவு செலவுத் திட்டங்களை பகுப்பாய்வு செய்கிறது.

## 3.2.15 குழந்தை பட்ஜெட்

எந்தவொரு நிதியாண்டிற்கும், அரசாங்கம் வைத்திருக்கும் குழந்தைகள் நலன் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு திட்டங்களுக்கான உண்மையான உறுதிப்பாட்டை ஆராய்வதற்கான ஒரு கருவி குழந்தை பட்ஜெட் ஆகும். அபிவிருத்தி உபாயத்தை கையகப்படுத்தவும், அதன் கடமைகளை நிறைவேற்றுவதில் உள்ள இடைவெளிகளை ஈடுசெய்யவும் இது நமக்கு உதவுகிறது. பட்ஜெட் பகுப்பாய்வு குழந்தை நலனில் எந்த பகுதி புறக்கணிக்கப்பட்டுள்ளது என்பதைக் காண ஒருவரை அனுமதிக்கிறது. எனவே குழந்தை பட்ஜெட் என்பது

மாநில நிர்வாகத்தை ஆராய்வதற்கான ஒரு கருவியாகும். சிறுவர் பட்ஜெட் பகுப்பாய்வு என்பது குழந்தைகளின் உரிமைகளை அமல்படுத்துவதில் மாநில அரசின் செயல்திறனைக் கண்காணிப்பதற்கு, ஒரு மதிப்புமிக்க கருவியாக மட்டுமில்லாமல் குழந்தைகள் உரிமைகள், கொள்கை திட்டமிடல் மற்றும் நிரலாக்கத்திற்கும் உதவுகிறது. எனவே குழந்தை பட்ஜெட் குறித்த அறிக்கையை வெளியிடுவதற்கு புள்ளிஇயல் துறை யுனிசெப் (Unicef) உடன் இணைந்து செயலாற்றுகிறது.

## 3.2.16 துறையின் தகவல் தொழில் நுட்ப முயற்சிகள்

- **வெளிப்படை அரசு தரவு தளம்**

2012–2013 ஆண்டு முதல் 2018–2019 வரையிலான தமிழ்நாடு புள்ளி இயல் கையேடுகள் தமிழ்நாடு மின்னனு நிறுவனத்தின் (ELCOT)

வெளிப்படை அரசு தரவு தளம் இணைய முகப்பில் (https://tn.data.gov.in/)வெளியிடப்பட்டுள்ளது. **2012–2013** ஆம் ஆண்டுக்கு முந்தைய புள்ளிஇயல் கையேடுகளின் தரவைப் பதிவேற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த தளத்தில் மாவட்ட கையேடுகள் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன. கடைசியாக **2017–2018** க்கான மாவட்ட கையேடு பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. புதியதாக சேகரிக்கப்பட்ட தரவுகளை பதிவேற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- **பொதுவான ஆய்வு பயன்பாட்டு கட்டமைப்பு மென்பொருள்**

புள்ளி விவரங்கள் சேகரிப்பு நடவடிக்கைகளை கணினி மயமாக்கும் பணியினை இத்துறை மேற்கொண்டு வருகிறது. கணினி மயமாக்கலின் காரணமாக காகித அடிப்படையிலான கேள்விகளிலிருந்து கையடக்க சாதனங்களுக்கு

துறை நகர்த்தும். இப்பணியினை நிறைவேற்ற தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மூலமாக இத்துறையில் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஒரு மென்பொருள் பொதுவான ஆய்வு பயன்பாடு கட்டமைப்பை உருவாக்கி வருகிறது. இம்மென்பொருள் தற்பொழுது சோதனை நிலையில் உள்ளது. விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 3.3 மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

மத்திய மற்றும் மாநில அரசுகள் எண்ணற்ற வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. 1974-ம் ஆண்டிலிருந்து இத்திட்டங்களின் பயன்கள், மக்களின் கருத்துக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையில் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையானது மதிப்பீட்டு ஆய்வுகளை செய்து

அரசுக்கு தெரிவிக்கிறது. இவ்வறிக்கைகள் கொள்கை உருவாக்கத்திற்கும் மற்றும் அத்திட்டங்களை மென்மேலும் மெருகேற்றவும், நடைமுறைப்படுத்தவும் உதவுகிறது.

இத்துறையானது இதுவரை 774 மதிப்பீட்டு ஆய்வு அறிக்கைகளை அரசுக்கு, சமூகநலம், சுகாதாரம், கல்வி, வேளாண்மை, நீர்ப்பாசனம், தோட்டக்கலை, வனம், வீட்டுவசதி, போக்குவரத்து, ஊரக வளர்ச்சி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மற்றும் பல்வேறு துறைகளின் ஆய்வுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 3.3.1 துறையின் முக்கியப் பணிகள்

i. மத்திய, மாநில அரசுத் திட்டங்கள் மற்றும் அயல்நாட்டு நிதி உதவி பெறும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்

ii. ‘தமிழ்நாடு – பொருளாதார ஆய்வறிக்கை’ ஆவணத்தைத் தயாரித்து வெளியிடுதல்

## 3.3.2 துறையின் நிர்வாகம் மற்றும் கண்காணிப்பு

திட்டம் மற்றும் வளர்ச்சி துறையானது இத்துறைக்கு தலைமை நிர்வாகத்துறையாகும். மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையின் இயக்குநரகம் அனைத்து மதிப்பீடுகளையும் தன்னிச்சையாகவும் மற்றும் வழங்கப்பட்ட ஆய்வுகளை முடிப்பதற்கு முழு பொறுப்பு ஏற்றும் செயல்பட்டு வருகிறது.

மாநில அளவிலான இரு அமைப்புக்களான மாநில மதிப்பீட்டுக் குழு மற்றும் மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழு இத்துறையின் ஆய்வுகளுக்கு வழிகாட்டியும், கண்காணிக்கவும் செய்கிறது.

- **மாநில மதிப்பீட்டுக் குழு (SEC)**

மாநில மதிப்பீட்டுக் குழுவின் தலைவராக செயல்படும் அரசு செயலர், நிதித் துறை, மதிப்பீட்டு ஆய்வுகளின் பட்டியலை முடிவு செய்கிறார். 2019 - 2020ம் ஆண்டிற்கு பதினான்கு மதிப்பீட்டாய்வுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

- **மாநில மதிப்பீட்டு ஆலோசனை குழு (SEAB)**

மாநில மதிப்பீட்டு ஆலோசனை குழுவானது மாநில திட்டக் குழுவின் துணை தலைவரை தலைமையாகக் கொண்டு செயல்படுகிறது. இக்குழுவில் பல்வேறு கல்வி ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் மாநில மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களும் அங்கம் வகிப்பர். இக்குழு ஆய்வுகளின் செயல்முறைகளில் உள்ள ஆய்வின் நோக்கங்கள் மற்றும் மாதிரி வரைவு குறித்து கலந்து ஆலோசித்து விவாதித்து முடிவு செய்கிறது.

இத்துறையில் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டு ஆய்வுகளின் முறையியல் வடிவமைப்பையும், குறிக்கோளையும் இறுதி செய்து இக்குழு ஒப்புதல் அளிக்கிறது. மேலும் வரைவறிக்கை மதிப்பீட்டாய்வின் முடிவுகள் மற்றும் பரிந்துரைகளை விவாதிக்கிறது. அதற்கு பின்னர் மதிப்பீட்டு ஆய்வுகள் இறுதி செய்யப்படுகின்றன. 2019 - 20ல் நடந்த மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழுவில் ஏழு மதிப்பீட்டு ஆய்வு அறிக்கைகளும் மற்றும் பதினைந்து மதிப்பீட்டு முறையியல்களுக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

### 3.3.3 செயல்திறன்

2019 - 2020ன் தொடக்கத்தில் அளிக்கப்பட்ட 22 ஆய்வுகள் முடிக்கப்பட வேண்டியிருந்தது. கூடுதலாக 14 ஆய்வுகள் மாநில மதிப்பீட்டுக்குழுவில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. 32 ஆய்வு முறையியல்களுக்கு மாநில மதிப்பீட்டு

ஆலோசனைக் குழுவில் ஒப்புதல் வழங்கப்பட்டது. தற்போது ஏழு ஆய்வுகள் முடிக்கப்பட்டு மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழுவில் முன்வைக்கப்பட்டது. நடைபெறும் 25 மதிப்பீட்டு ஆய்வுகளில் 4 ஆய்வுகள் வெளி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது. மீதமுள்ள 4 ஆய்வுகளில் ஒன்றுக்கு முறையியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

### 3.3.4 ஆய்வின் தொடர் செயல்முறை

மாநில மதிப்பீட்டுக் குழுவின் ஒப்புதல் பெற்று ஆய்வுகள் வழங்கப்படுகிறது. அதன் பின்னர் சம்பந்தப்பட்ட துறைகளிலிருந்து அடிப்படை விவரங்கள் சேகரிக்கப்படுகின்றது. பின்னர் முறையியல் தயாரிக்கப்பட்டு, மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழுவின் முன் வைக்கப்படுகின்றது. முதன்மை கட்ட தரவுகள் சேகரிப்பதற்காக களப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு முன்னர் காகிதம் மூலம் சேகரிக்கப்பட்டது.

தற்பொழுது வரைப்பட்டிகை கொண்டு மின்னணு மூலம் சேகரிக்கப்படுகின்றது. மேலும் உடனடியாக கிடைக்கபெறும் இரண்டாம் நிலை தரவுகள் இதே முறையில் சேகரிக்கப்படுகின்றன.

சேகரிக்கப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, ஆய்வறிக்கைகள் தயாரிக்கப்பட்டு மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழுவின் ஒப்புதலுக்கு பின் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்காக அனுப்பப்படுகின்றன.

## 3.3.5 மேற்கொள்ளப்படும் ஆய்வுகளின் வகைகள்

- **தேவைகள் மதிப்பீடு**

பிரச்சனைகளுக்கான வாய்ப்புகள் மற்றும் இயல்புகளை அடையாளம் காண்பது மற்றும் பிரச்சனைகளுக்கு தேவையான சேவை வழங்கலை முடிவு செய்தல் ஆகும்.

➢ **திட்ட கோட்பாட்டு மதிப்பீட்டாய்வு**

திட்டத்தின் பின்னணியில் உள்ள நோக்கக் கூறு மேலும் திட்டத்தின் இறுதி இலக்கு மற்றும் உள்ளீடுகள் ஆகியவற்றிற்கு இடைப்பட்ட காரண வழிமுறைகளை உள்ளடக்கியதாகும்.

➢ **செயல்முறை மதிப்பீட்டு ஆய்வு**

செயல்முறை மதிப்பீட்டாய்வானது செயல் திட்டங்களுக்கான திட்ட செயல்பாடுகள், நடைமுறைப்படுத்துதல் மற்றும் சேவை வழங்கல் ஆகியவற்றை ஆய்வு செய்கிறது. இத்துறையில் எடுத்துக் கொள்ளப்பட்ட அனேகமாக அனைத்து ஆய்வுகளும் செயல்முறை மதிப்பீட்டாய்வை ஒரு பகுதியாகக் கொண்டுள்ளது.

➢ **தாக்க மதிப்பீட்டாய்வு**

குறிப்பிட்ட செயல்களினால் ஏற்படும் மாற்றங்களைக் கொண்டு அத்திட்டத்தின் தாக்கம்

மற்றும் முக்கிய விளைவுகளைக் கண்டறிவது தாக்க மதிப்பீட்டாய்வாகும்.

- ➢ **மதிப்பு செயல்திறன் பகுப்பாய்வு**

மதிப்பு செயல்திறன் பகுப்பாய்வென்பது ஒரே நோக்கத்தினை அடைய பல்வேறு திட்டங்களின் வெவ்வேறு சூழ்நிலை மற்றும் காலகட்டங்களில் செயல்படுத்த, செய்யப்பட்ட செலவு மற்றும் அதன் தாக்கங்கள் குறித்த ஒப்பீடாகும்.

## 3.3.6 தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் (NFSA)

மத்திய அரசின் நுகர்பொருள் மற்றும் நுகர்வோர் நலத்துறையினரால் திறனடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு தேசிய உணவுப் பாதுகாப்பு சட்டம் 2013-ன் தொடர் மதிப்பீட்டாய்வில் பங்கேற்று மதிப்பீடு செய்ய மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையானது மத்திய அரசுடன் ஓர்

புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இத்தொடர் மதிப்பீட்டாய்வானது எட்டு காலாண்டுகளாக இரண்டு ஆண்டுகள் தொடர் மதிப்பீடு கொண்டதாகும். ஒவ்வொரு காலாண்டிலும் நான்கு மாவட்டங்களில் 20 நியாய விலைக் கடைகள் மற்றும் அதன் விற்பனையாளர்கள் மற்றும் 300 பயனாளிகள் மாதிரிகளாக தேர்வு செய்யப்பட்டு புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படுகிறது. நியாயவிலைக் கடை அளவிளான கண்காணிப்புக் குழு மற்றும் மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு உறுப்பினர்களிலிருந்து மாதிரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு குறை நிவர்த்தி வழிமுறைகள் குறித்து அறியப்படுகிறது. நியாய விலைக் கடைகளுக்கான இருப்பு மற்றும் விநியோக முறை குறித்தும் நோக்கப்படுகிறது. இதற்கான கேள்வித்தாள் மத்திய அரசின் நுகர்பொருள் மற்றும் நுகர்வோர் நலத்துறையிடமிருந்து பெறப்பட்டு

களப்பணி மேற்கொண்டு மதிப்பீட்டறிக்கை மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையின் மூலம் அனுப்பப்படுகிறது. இதற்கான தரவுகள் மின்னணு முறையில் சேகரிக்கப்படுகிறது.

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் காலமானது ஜூலை 2018 முதல் ஜூன் 2020 வரை எட்டு காலாண்டுகளுக்கான எட்டு அறிக்கைகள் தரப்பட வேண்டும். டிசம்பர் 2019 வரை 5 காலாண்டுகளுக்கான 5 அறிக்கைகள் முடிக்கப்பட்டுள்ளன. மார்ச் 31, 2020ம் காலாண்டுக்கான ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

## 3.3.7 மின்னணு மதிப்பீட்டு முறை

மின்னணு மதிப்பீட்டு முறையின்கீழ் இத்துறைக்கென வலைதளம் உருவாக்கப்பட்டு வன்பொருள் மற்றும் மென்பொருள் செயலிகள்

வாங்கப்பட்டன. செயலிகளை பயன்படுத்தி வினாத்தாள் உருவாக்கம், வினாத்தாள் பதிவேற்றம் செய்தல் மற்றும் வரைப்பட்டிகை பயன்படுத்தி பணியாளர்களுக்கு களப்பணியில் விவரங்கள் சேகரித்தல் போன்றவற்றிற்கான பயிற்சி அளிக்கப்பட்டு தரமான தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வின் திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது. 2018ஆம் ஆண்டிலிருந்து இத்துறையில் 14 மதிப்பீட்டு ஆய்வுகளுக்கான முதன்மை தரவுகள் வரைப்பட்டிகைகள் பயன்படுத்தி சேகரிக்கப்பட்டுள்ளது.

### 3.3.8 J-PAL-SA மற்றும் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையின் இணைச் செயல்பாடுகள்

மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை, ஆதார அடிப்படையிலான கொள்கை முடிவு எடுப்பதை நடைமுறைப்படுத்த மாசாச்சூசெட்சு

(Massachusetts) தொழில்நுட்பக் கழகத்தின் (அமெரிக்க ஐக்கிய நாடுகள்) தெற்காசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல்ஆராய்ச்சி ஆய்வக அமைப்புடன் (J-PAL-SA) இணைந்து தொடர்ச்சியாக 2014ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

- J-PAL SA-ன் உதவியுடன் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை, பழையத் தரவுச் சேகரிப்பு முறைகளிலிருந்து மின்னணுத் தரவுச் சேகரிப்புக்கு மாறியுள்ளது.
- மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறைக்கு (i) மின்னணுத் தரவுச் சேகரிக்கும் மென்பொருள் விற்பனையாளரை தேர்ந்தெடுக்கும் குறிப்பு விதிமுறைகள் (TOR) உருவாக்குதல் (ii) மின்னணு கேள்வித்தாள் உருவாக்குதல் மற்றும் திருத்துதலுக்கான பயிற்சி வழங்குதல் மேலும் (iii) மின்னணுத் தரவுச் சேகரிப்பு

மென்பொருள் உருவாக்குதல் குறித்த அறிவுரைகளை விற்பனையாளர்களுக்கு வழங்குவது முதலியவற்றில் ஒவ்வொரு படியிலும் பங்கேற்றுள்ளது.

- பல்வேறு மதிப்பீட்டு நுட்பங்கள், மின்னணு தரவு சேகரிப்பு பற்றிய பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது. வெளி நிறுவனங்களுக்கான குறிப்பு விதிமுறைகள், ஆய்வுக் கோரிக்கைக்கான வேண்டுகோள், தொழில்நுட்பத் திறன், மதிப்பீடு மற்றும் விலை குறித்த பயிற்சிகள் இத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 3.3.9 மதிப்பீடு வழிமுறைகள்

கொள்கை முடிவுகள் எடுப்பதற்கான மதிப்பீட்டு பங்கினை வலுப்படுத்த பொதுவான மதிப்பீடு வழிகாட்டியானது வடிவமைப்பு, புரிதல் மற்றும் வெளிச்செயலாக்கம் மூலம் பல்வேறு அரசு

துறைகள் மதிப்பீட்டாய்வு மேற்கொள்ளவும் இத்துறையின் உதவி மற்றும் சேவைகளை பயன்படுத்தவும் வழிகாட்டுகிறது.

## 3.3.10 வெளி நிறுவனங்களுக்கான மதிப்பீட்டு ஆய்வுகள்

அதிக எண்ணிக்கையிலான மாதிரிகள் மற்றும் பரவலான பகுதிகளிலிருந்தும் மேற்கொள்ள வேண்டிய ஆய்வுகளுக்கான பட்டியலிடப்பட்ட முகமைகள் மூலம் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது. 2016 - லிருந்து 8 ஆய்வுகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் 4 ஆய்வுகள் முடிக்கப்பட்டு 4 ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும் இத்துறையில் நிலுவையிலுள்ள அனைத்து ஆய்வுகளும் 2020 - 2021க்குள் முடிப்பதற்கு வெளி நிறுவனங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

## 4.0 சென்னை மெட்ரோ இரயில் திட்டம்

தமிழ்நாடு அரசு, சென்னை மெட்ரோ இரயில் என்ற உலகத் தரத்துக்கு இணையான இரயில் சார்ந்த பொதுப் போக்குவரத்து வசதியை சென்னையில் அறிமுகப்படுத்தியுள்ளது. சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் குறிக்கோள் சென்னைப் பெருநகர மக்களுக்கு வேகமான, நம்பத் தகுந்த, வசதியான, திறன் மிக்க மற்றும் சிக்கனமான பொதுப் போக்குவரத்து வசதியை ஏற்படுத்துவது ஆகும். மேலும் இத்திட்டம் இதரப் பொது மற்றும் தனியார் போக்குவரத்து வசதிகளாகிய பேருந்து, புறநகர் இரயில்கள் மற்றும் தற்போதுள்ள பெருந்திரள் துரித இரயில் போக்குவரத்து அமைப்பு உள்ளிட்ட இரயில் அமைப்புகளுடனும் சீரிய முறையில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

**கட்டம் –I**

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்–Iன் கீழ், வண்ணாரப்பேட்டை முதல் சென்னை விமான நிலையம் வரை **23.1** கி.மீ நீளத்திலான வழித்தடம்–**1** மற்றும் சென்னை சென்ட்ரலிலிருந்து புனித தோமையார் மலை வரை **22.00** கி.மீ நீளத்திலான வழித்தடம்–**2** ஆகிய இரண்டு வழித்தடங்களை உள்ளடக்கியது. இந்த இரண்டு வழித்தடங்களுக்கான பயணிகள் சேவை பல்வேறு கட்டங்களாக துவக்கப்பட்டு, அவற்றில் கடைசியாக **10.02.2019** அன்று துவக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு தனது கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதைத் தொடர்ந்து, இத்திட்டத்தினை மத்திய அரசும் மாநில அரசும் கூட்டாக இணைந்து **14,600** கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றுவதற்கு மத்திய அரசு தனது நிருவாக ஒப்புதலை பிப்ரவரி

2009–ல் வழங்கியுள்ளது. இத்திட்ட செலவு மதிப்பீடு ரூ.18,380 கோடியாக திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு திட்ட மதிப்பீட்டில் 15 விழுக்காட்டைப் பங்கு மூலதனமாகவும், 5 விழுக்காட்டை சார்நிலைக் கடனாகவும் அளிக்கின்றது. அதே போன்று தமிழ்நாடு அரசும் திட்ட மதிப்பீட்டில் 15 விழுக்காட்டை பங்கு மூலதனமாகவும், 5.78 விழுக்காட்டை சார்நிலைக் கடனாகவும் அளிக்கின்றது. மீதமுள்ள 59.22 விழுக்காடு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையிடமிருந்து (Japan International Cooperation Agency) மத்திய அரசின் வெளிநாட்டு கடனுதவி பெறுவதற்கு வெளியிட்டுள்ள வழிவரைமுறைகளுக்கிணங்க கடனாகப் பெறப்படுகிறது.

இத்திட்டம் கம்பெனிகள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட “சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட்” என்ற சிறப்பு நோக்க நிறுவனத்தின் மூலம்

செயல்படுத்தப்படுகிறது. இந்நிறுவனம் பின்னர் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்குகளை வெளிக்காட்டும் வகையில் ஒரு கூட்டு முயற்சி நிறுவனமாக மாற்றியமைக்கப்பட்டு, மத்திய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான செயலாளரை நிருவாக தலைவராகவும், அவருடன் சேர்த்து ஐந்து இயக்குநர்களை மத்திய அரசு நியமித்தும் மற்றும் மாநில அரசு, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரையும் சேர்த்து ஐந்து இயக்குநர்களை நியமித்துள்ளது. இவர்களைத் தவிர மூன்று செயல் இயக்குநர்களும், இரண்டு சுவாதீன இயக்குநர்களும் உள்ளனர்.

**செலவினம்**

தமிழ்நாடு அரசு **2858.00** கோடி ரூபாயைப் பங்கு மூலதனமாகவும் **2834.22** கோடி ரூபாயைச் சார்நிலைக் கடனாகவும் வழங்கியுள்ளது. மத்திய அரசு **2190.00** கோடி ரூபாயைப் பங்கு மூலதனமாகவும், **730.00** கோடி

ரூபாயைச் சார்நிலைக் கடனாகவும் மற்றும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை **8646.00** கோடி ரூபாயை (முதுநிலைக் கடன்) நிதி உதவியாக வழங்கியுள்ளது.

**கட்டம்–I இன் நீட்டிப்பு – வண்ணாரப்பேட்டை முதல் திருவொற்றியூர் / விம்கோ நகர் வரை**

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் வழித்தடம்–1ஐ தற்போதுள்ள வடக்கு முனையமான வண்ணாரப்பேட்டையிலிருந்து திருவொற்றியூர் / விம்கோ நகர் வரையில் **(9.051 கி.மீ), 3,770** கோடி ரூபாய் செலவில் நீட்டிப்பதற்கான, தமிழ்நாடு அரசு மற்றும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் கருத்துருவிற்கு மத்திய அரசு **15.06.2016** அன்று நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது.

**செயல் முன்னேற்றம்**

இந்த நீட்டிப்புத் திட்டத்திற்கான கட்டுமானப் பணிகள் **23.07.2016** அன்று ஆரம்பிக்கப்பட்டன.

அனைத்துச் சுரங்கம் தோண்டும் பணிகளும் முடிவுற்ற நிலையில், இரண்டு சுரங்கப்பாதை இரயில் நிலையங்கள், உயர்த்தப்பட்ட வழித்தடப் பகுதிகள் மற்றும் மெட்ரோ நிலையங்கள், விம்கோ நகர் பணிமனை ஆகியவற்றின் கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இந்த நீட்டிப்புத் திட்டப் பணிகள் 2020ஆம் ஆண்டு மத்தியில் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**செலவினம்**

தமிழ்நாடு அரசு **508.00** கோடி ரூபாயைப் பங்கு மூலதனமாகவும் **408.00** கோடி ரூபாயை சார்நிலைக் கடனாகவும் வழங்கியுள்ளது. மத்திய அரசு **508.00** கோடி ரூபாயை பங்கு மூலதனமாகவும், **117.00** கோடி ரூபாயை சார்நிலைக் கடனாகவும் மற்றும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை **1359.60** கோடி ரூபாயை (முதுநிலைக் கடன்) நிதி உதவியாக வழங்கியுள்ளது.

**கட்டம் – I இன் நீட்டிப்பு – விமான நிலையத்திலிருந்து கிளாம்பாக்கம் பேருந்து முனையம் வரை**

மெட்ரோ இரயில் வழித்தடம்–1ஐ சென்னை விமான நிலையத்திலிருந்து கிளாம்பாக்கம் பேருந்து முனையம் வரை நீட்டிப்பதற்கான, விரிவான சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்காக அரசு ஒப்புதலை ஜனவரி–2020இல் அளித்துள்ளது. இவ்வறிக்கைகள் தயாரிக்கும் பணி சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. விரிவான சாத்தியக்கூறு / விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கும் பணிக்காக, திட்டம் தயாரிக்கும் நிதியிலிருந்து, தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் 1.20 கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்துள்ளது.

**சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-II**

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம்–IIற்கான, 118.9 கி.மீ மொத்த நீளத்திலான ஒரு

ஒருங்கிணைந்த விரிவான திட்ட அறிக்கை **69,180** கோடி ரூபாய் செலவு மதிப்பீட்டில், திருவாளர்கள் ரைட்ஸ் லிமிடெட் (M/s RITES Limited) நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு, அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டது. ஜனவரி–**2019** இல், சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்–IIற்கான கீழ்க்கண்ட மூன்று மெட்ரோ இரயில் வழித்தடங்களுக்கு அரசு கொள்கையளவிலான ஒப்புதலை வழங்கியுள்ளது:

| | | |
|---|---|---|
| வழித்தடம் –**3** | மாதவரம் முதல் சிப்காட் வரை | **45.8** கி.மீ |
| வழித்தடம் –**4** | கலங்கரை விளக்கம் முதல் பூந்தமல்லி புறவழிச்சாலை வரை | **26.1** கி.மீ |
| வழித்தடம்–**5** | மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரை | **47.0** கி.மீ |
| | **மொத்தம்** | **118.9 கி.மீ** |

இந்தத் திட்டத்திற்கான செலவு மதிப்பீடு **69,180** கோடி ரூபாயாகும். இது டிசம்பர்–**2018** விலைகளின்

படி, நிலங்கள், மறு குடியமர்வு மற்றும் மறுவாழ்வு மற்றும் மாநில வரிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

இந்த ஒருங்கிணைந்த விரிவான திட்ட அறிக்கை, மத்திய அரசின் ஒப்புதல் மற்றும் நிதியுதவிக்காகவும், வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து கடனுதவி பெறுவதற்காகவும் மத்திய அரசிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை, ஆசிய மேம்பாட்டு வங்கி, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி, புதிய மேம்பாட்டு வங்கி மற்றும் உலக வங்கி ஆகியவை அடங்கும்.

ரூபாய் **40,941** கோடிசெலவு மதிப்பீட்டில், வழித்தடங்கள்–**3** மற்றும் **5** இல் **52.01** கி.மீ மொத்த நீளத்திலான இரண்டு முன்னுரிமை வழித்தடப் பகுதிகளைச் செயல்படுத்துவதற்கு, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை ஒப்புதல் அளித்துள்ளது. இதில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு

முகமையின் கடனுதவி **20,196** கோடி ரூபாயாகும். அலுவல் மேம்பாட்டு நிதி (Official Development Assistance) கடனுதவி **75,519** மில்லியன் ஜப்பான் யென் (சுமார் **4770** கோடி ரூபாய்) அளவீட்டிலான முதல் தவணைக்கான கடன் ஒப்பந்தம் மத்திய அரசு மற்றும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமைக்கிடையே **21.12.2018** அன்று கையெழுத்தாகியுள்ளது.

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்–II இன் கீழ், வழித்தடம்–**3**இல் மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலும் **(35.67** கி.மீ**)** மற்றும் வழித்தடம்–**5**இல் மாதவரம் முதல் சென்னைப் புறநகர் பேருந்து நிலையம் வரையிலுமான **(16.34** கி.மீ**)** மொத்தம் **52.01** கி.மீ நீளத்திலான முன்னுரிமை வழித்தடப் பகுதிகளை **40,941** கோடி ரூபாய் செலவு மதிப்பீட்டில், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் வெளிநாட்டு கடனுதவியுடனும் செயல்படுத்துவதற்கான நிருவாக ஒப்புதலை

ஜனவரி–2019இல் தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் கடனும் வழங்குவதற்கு தயாரான நிலையில் உள்ளது. இந்தத் திட்டம் “மாநில அரசு திட்டமாகச்” செயல்படுத்தப்பட உள்ளது.

17.07.2018 அன்று நடைபெற்ற மத்திய பொருளாதார விவகாரங்களுக்கான துறையின் ஆய்வு குழுக் (Screening Committee) கூட்டத்தில் கலங்கரை விளக்கத்திலிருந்து பூந்தமல்லி புறவழிச்சாலை வரையிலான வழித்தடம்–4 முழுமைக்கும் ஆசிய மேம்பாட்டு வங்கி, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி, புதிய மேம்பாட்டு வங்கி மற்றும் உலக வங்கி ஆகியவை நிதியுதவி அளிப்பதற்கான கொள்கை அளவிலான ஒப்புதலை வழங்கியது. அதன் பின்னர், கட்டம்–II இல் எஞ்சியுள்ள வழித்தடப் பகுதிகளுக்கு (வழித்தடம்–3இல் சோழிங்கநல்லூர் முதல் சிட்காட் வரை (10.13 கி.மீ)

மற்றும் வழித்தடம்–5இல் சென்னை புறநகர் பேருந்து நிலையம் முதல் சோழிங்கநல்லூர் வரை **(30.66 கி.மீ)** முதல்நிலை திட்ட அறிக்கைகள் (Preliminary Project Reports) பொருளாதார விவகாரங்களுக்கான துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. மத்திய பொருளாதார விவகாரங்களுக்கான துறையின் ஆய்வுக் குழுவின் **22.01.2019** மற்றும் **14.02.2019** இல் நடைபெற்ற கூட்டங்களில் ஆசிய மேம்பாட்டு வங்கி, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி மற்றும் புதிய மேம்பாட்டு வங்கி ஆகியவை நிதியுதவி அளிப்பதற்கான கொள்கை அளவிலான ஒப்புதலை வழங்கியது. அதன் பின்னர் மேற்கண்ட பன்னாட்டு நிதி நிறுவனங்களின் அலுவலகக் குழுக்கள் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு வருகை புரிந்து கலந்துரையாடினர். இதில் உலக வங்கி மட்டும் மெட்ரோ இரயில் திட்டப்பணிக்கு கடனுதவி வழங்க விருப்பம் தெரிவிக்கவில்லை என்பதால், உலக

வங்கியின் நிதியுதவிற்கு ஒதுக்கப்பட்ட பணிகள் ஏனைய நிதிநிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்–Iஇல் மத்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு கூட்டு முயற்சியுடன் சரிசமமான பங்களிப்புடன் நிதியுதவி வழங்கியதைப் போல், சென்னை மெட்ரோ இரயில் திட்டம், கட்டம்–IIற்கு ஒப்புதல் மற்றும் நிதியுதவி வழங்கக்கோரி மத்திய அரசின் உயர்மட்ட அளவில் மாநில அரசானது கேட்டுகொண்டுள்ளது. இதற்கான மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

**தாம்பரம் முதல் வேளச்சேரி வரையிலான இலகு இரயில் இணைப்பு**

தாம்பரத்தையும் வேளச்சேரியையும் இலகு இரயில் திட்டம் மூலம் இணைப்பது தொடர்பாக விரிவான சாத்தியக்கூறு அறிக்கை / விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு தமிழ்நாடு அரசு ஜனவரி–2020 இல் ஒப்புதல் அளித்துள்ளது.

இவ்வறிக்கைகளைத் தயாரிக்கும் பணி சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம், விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்காக **1.5** கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்துள்ளது.

**கோயம்புத்தூர் பெருந்திரள் துரித போக்குவரத்து அமைப்பு**

இம்மாநிலத்தின் இரண்டாவது பெரும் நகரமான கோயம்புத்தூர் நகரம் 'தென்னிந்தியாவின் மான்செஸ்டர்' என்று அழைக்கப்படுகிறது. இந்நகரம், இரயில், சாலை மற்றும் விமான போக்குவரத்தினால் மாநிலத்தின் பிற பகுதிகளுடன் நன்கு இணைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்நகரம், சென்னைக்கு அடுத்தபடியாக, இரண்டாவது பெரிய தொழில் நகரமாகும். கோயம்புத்தூர் நகரில் அதிகரித்துள்ள போக்குவரத்தினை கருத்தில் கொண்டும், நகர்ப்புற போக்குவரத்தில் பொதுப்

போக்குவரத்தின் பங்கினை உயர்த்த வேண்டிய அவசியத்தை கவனத்தில் கொண்டும், மெட்ரோ இரயில் போன்று பெருந்திரள் துரித போக்குவரத்து அமைப்பு ஒன்றினை கோயம்புத்தூர் நகரில் செயல்படுத்திட தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

கோயம்புத்தூர் நகரில் மெட்ரோ இரயில் திட்டம் நிறைவேற்றப்படும் என்ற அறிவிப்பினை சட்டமன்ற விதி–**110**ன் கீழ், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் **19.07.2017** அன்று சட்டமன்றத்தில் அறிவித்தார்கள். இவ்வறிப்பினை தொடர்ந்து, இத்திட்டத்தினை நிறைவேற்றுவதற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வுப் பணிக்காக ஜெர்மன் நிறுவனமான கே.எப்.டபிள்யு (KfW) நிதியுதவி அளிக்கிறது.

**ஓ.பன்னீர்செல்வம்**
**துணை முதலமைச்சர்**